கிறிஸ்தவம்

# பரிசுத்த வேதாகமம்
# புதிய ஏற்பாடு



121804

ஆசிரியர் கல்விப் பாடநெறி

| | |
|---|---|
| எழுத்தாளர் | ஒஸ்ரின் டயஸ் |
| பாடப்பதிப்பாசிரியர்கள் | அருள் திரு. அலெக்ஸ் திஸநாயக்க<br>அருள் திரு. சகோதரர் சைமன் பெர்ணுண்டோ<br>டயஸ் பெர்ணுண்டோ<br>எம். ஜே. ஏ. பெரேரா<br>டபிள்யூ. எப். எம். லோவு<br>கே. எ. சி. டி. குணதிலக<br>பெ. கணநாதபிள்ளை<br>அனெஸ்டீன் அந்தனி<br>சகோதரி மாறியா ரெஜிஞ |
| படங்கள் | ரி. எல். பெரேரா |
| தளக்கோலம் | எஸ். எம். ஆர். சூதின்<br>மகிந்த ராஜபக்ச<br>ஏ. சிவராசா |
| மேற்பார்வை | கே. ஏ. பியதிஸ்ஸ<br>ஆர். பீ. ஏ. ஜயசேகர |
| பணிப்பு | கலாநிதி எஸ். டி. லயனல் அமரகுணசேகர |

R. Regina

# பரிசுத்த வேதாகமம்
# புதிய ஏற்பாடு

தொலைக் கல்வி நிறுவகம்
தேசியக் கல்வி நிறுவகம்

| கிறிஸ்தவம் | 121 |
|---|---|
| புதிய ஏற்பாடு | 121804 |

உள்ளடக்கம் பக்கம்


0.0 அறிமுகம் ........................ 3

1.0 குறிக்கோள்கள் .................. 3

2.0 முற்சோதனை ..................... 4

பகுதி I

3.0 நற் செய்தியின் ஏடுகள் ........... 5

பகுதி II

4.0 அப்போஸ்தலர்கள் பணி ........... 14

பகுதி III

5.0 திருமுகங்கள் ..................... 18

பகுதி IV

6.0 திருவெளிப்பாடு .................. 28

7.0 பொழிப்பு ......................... 32

8.0 பிற் சோதனை ..................... 33

9.0 ஒப்படை .......................... 35

10.0 விடைகள் ........................ 35

11.0 கலைச் சொற்கள் ................. 36



( C ) 1989 தொலைக்கல்வி நிறுவகம்



பதிப்பு 1.1

## 0.0 அறிமுகம்

பரிசுத்த வேதாகமத்தில் 1ஆம் பகுதியில் பழைய ஏற்பாட்டை விரிவாகப் படித்து முடிந்திருக்கும் உங்கள் கவனத்தை இம் மொடியூலிலே 2ஆம் பகுதியாகிய புதிய ஏற்பாட்டில் செலுத்த விரும்புகின்றோம்.

பழைய ஏற்பாட்டில் தான் தெரிந்துகொண்ட மக்களோடு தான் தெரிந்துகொண்ட தலைவர்கள் மூலம் ஓர் உடன்படிக்கையைச் செய்த இறைவன் புதிய ஏற்பாட்டில் மனுவுரு எடுத்த இறைமான் இயேசுவின் மூலம் மனுக்குலத்துடன் புதிய உடன்படிக்கை செய்தருளினர்.

புதிய ஏற்பாட்டில் நடுவராக விளங்கும் இயேசுக் கிறிஸ்து பழைய ஏற்பாட்டில் கூடுதலான மனிதத் தன்மையை முன் வைத்து இறைவனிடம் திரும்பி வருமாறு அழைப்பு விடுகின்றார். இந்த அழைப்போடு நின்றுவிடவில்லை. இதைத் தொடர்ந்து தமது பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியாக மனுக்குலத்தைப் பாவத்தின் அடிமைத்தனத்தில் இருந்து மீட்டு, அவர்களுக்கு விடுதலை அளித்து இறைவனுடன் அவர்களை ஒப்பரவாக்குகின்றார். இவ்வாறு பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டின் மூலமாக நிறைவு பெறுகிறது. இவ்வாறாக இயேசுக் கிறிஸ்து உலக மீட்பராகத் திகழ்ந்தார்.

யேசுவின் உயிர்ப்புக்குப் பின் 60 ஆண்டுகளுக்குள் 12 எழுத்தாளர்களினால் எழுதப்பட்ட 27 புத்தகங்கள் புதிய ஏற்பாட்டில் அடங்கியுள்ளன. அந்த ஒவ்வொரு புத்தகத்திலும் வெவ்வேறான கருத்துக்கள் அடங்கியிருந்தாலும் 27 முத்துக்கள் கோக்கப்பட்ட பொன் சங்கிலியைப் போன்று கிறிஸ்து மீட்பராவர் என்னும் தலைப்பினால் அவை எல்லாம் ஒன்றிணைந்துள்ளன.

ஆகவே ஆசிரியராகக் கடமையாற்றும் உமக்கு இதிலே நல்ல அறிவு இருப்பது அவசியமாகும். இப்போது எமது பணி உமக்கு அப்படியானதொரு அறிவை வளர்க்கும் என நம்புகிறோம். இம் மொடியூலைக் கற்பதன் மூலம் கீழ் உள்ள குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும் எனக் கருதுகிறோம்

## 1.0 குறிக்கோள்கள்

- ★ புதிய ஏற்பாடு என்ன என்பதை விளங்கிக்கொள்ளல்.
- ★ நான்கு நற்செய்திகளிலுள்ள ஒற்றுமை, வேற்றுமைகளைப் பற்றி அறிந்து கொள்ளல்.
- ★ புதிய ஏற்பாட்டிலுள்ள நூல்களைப் பற்றிய அடிப்படையான அறிவைப் பெற்றுக்கொள்ளல்.

★ புதிய ஏற்பாட்டில் இறை சித்தத்தைக் காணல்.

★ புதிய ஏற்பாட்டைப் படிப்பதனுலான நன்மை பற்றி ஆராய்தல்.

★ கிறிஸ்தவனுக்குரிய முறையில் சிந்தித்து, செயலாற்றக் கூடிய ஓர் ஆவலைத் தூண்டி விடுதல்.

★ திருச்சபையின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ற முறையில் ஒருவருக்குள்ள திறமைகளைப் புதிய ஏற்பாட்டிற்கு ஏற்ற முறையில் வளர்த்துக் கொள்ளல்.

★ இறை அரசை இவ்வுலகில் கட்டியெழுப்பவும் கிறிஸ்துவினுடைய போதனைப் பணியைத் திறம்படச் செய்யவும் வேண்டிய வகையில் உதவுதல்.

இந்த மொடியூலைக் கற்பதற்கு முன் கீழ் உள்ள முற் சோதனையில் ஈடுபடுங்கள்.

## 2.0 முற்சோதனை

மிகவும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1 புதிய ஏற்பாட்டில் உள்ள நூல்களின் தொகை.

i 45
ii 14
iii 72
iv 27

2 நற்செய்தியின் ஆசிரியர்கள்

i லூக்காஸ், மாற்கு, மத்தேயு, சின்னப்பர்
ii லூக்காஸ், மாற்கு, மத்தேயு. அருளப்பர்
iii மத்தேயு, மாற்கு, லூக்காஸ், யேக்கப்
iv இராயப்பர், சின்னப்பர், மத்தேயு, மாற்கு

3 யேசுவைக் காட்டிக் கொடுத்தவன்

i ஏரோது
ii பிலாத்து
iii யூதாஸ்
iv அனனியாஸ்

4 யேசுவைச் சிலுவையில் அறைந்து கொன்றது,

i விபூதி புதன்
ii பெரிய வியாழன்
iii பாஸ்கு ஞாயிறு
iv பெரிய வெள்ளி

5 பரிசுத்த திருக்குடும்பம் வாழ்ந்தது

i நாசரேத்தில்
ii யூதாவில்
iii பெத்தலகேமில்
iv சமாரியாவில்

6 பூசைப்பலியில் வாசிக்கப்படும் திருமுகங்கள்

i ஆதியாகமத்தில் இருந்து
ii இறைவாக்கினர் ஆகமத்தில் இருந்து
iii புதிய ஏற்பாட்டில் இருந்து
iv பழைய ஏற்பாட்டில் இருந்து

7 திரிகாலச் செபம் சொல்லும்போது நாம் கிறிஸ்துவின் எம் மறை பொருளை நினைவு கூருகின்றோம்.

i மனிதவதாரம்
ii அவரின் பிறப்பு
iii மரணம்
iv உத்தாணம்

8 பெந்திக்கோஸ் திரு விழாவின் போது நாம் நினைவு கூருவது,

i யேசுவின் விண்ணேற்பு.
ii இரட்சணியத்தின் முழுமை.
iii பரிசுத்த ஆவியானவர் வருகை
iv திரித்துவத்தின் வெளியரங்கம்

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

இப்போது நாங்கள் உங்களுக்குப் புதிய ஏற்பாட்டில் இருக்கும் பல்விதமான பகுதிகளை எடுத்துக் காட்ட இருக்கின்றோம். உமது கவனத்தை இப்போது நான்கு நற்செய்தியிலும் செலுத்துவோம்.

பகுதி I

## 3.0 நற்செய்தியின் ஏடுகள்

ஆயிரம் ஆண்டுகளாக மனிதகுலம் இரட்சகரின் வருகைக்காகக் காத்திருந்தது. காலம் நிறைவுற்ற போது வாக்குப் பணணப்பட்டபடி இரட்சகர் இவ்வுலகிற்கு வந்து நற்செய்தியைப் போதித்தார். நற் செய்தியாவது யேசுக் கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றையும், அவர் நிறைவேற்றிய பணியையும், இறைவனின் அளவு கடந்த அன்பையும், இறை இராச்சியத்தை அடைய மனிதனை அழைக்கும் முறையையும் சித்திரித்துக் கூறுகின்றது.

நற்செய்தி முதலாவதாக வாய்மொழியாக எடுத்துரைக்கப்பட்டது. கிறிஸ்து நற்செய்தியை அவரின் சொல்லாலும், செயலாலும் எடுத்துரைத்தார். அதன் பின் பரிசுத்த ஆவியைப் பெற்ற அப்போஸ்தலர்கள் உலகெங்கும் இந் நற்செய்தியை எடுத்துரைத்தார்கள்.

''இஸ்ராயேல் மக்களே, நான் கூறுவதைக் கேளுங்கள். புதுமைகள், அற்புதங்கள், அருங்குறிகளால் நாசரேத்தூர் யேசு கடவுளது சான்று பெற்றவராக உங்கள் முன் எண்பிக்கப் பெற்ருர்.

ஏனெனில், நீங்கள் அறிந்திருப்பது போல், இவற்றையெல்லாம் உங்கள் நடுவில் கடவுளே அவர் வழியாகச் செய்தார். கடவுளின் திட்டத்திற்கும் முன் அறிவிற்கும் ஏற்பக் கையளிக்கப்பட்ட இவரைத்தாம், நீங்கள் திருச்சட்டம் அறியாதவர்களைக்கொண்டு சிலுவையில் அறைந்து கொன்றீர்கள். கடவுளே அவரை மரண வேதனையில் நின்று விடுவித்து, உயிர்த்தெழச் செய்தார். ஏனெனில், மரணம் அவரைத் தன் பிடியில் வைத்திருத்தல் இயலாது.''

''இந்த யேசுவைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் எல்லோரும் சாட்சிகள். இங்ஙனம், கடவுளின் வல்லமையால் உயிர்த்தப்பெற்ற இவர் வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியைத் தந்தையிடம் இருந்து பெற்று, நீங்கள் இப்பொழுது காண்பதும், கேட்பதுமாகிய இதைப் பொழிந்தருளினுர். வானகத்திற்கு ஏறிச் சென்றவர் தாவீதல்லர். ஏனெனில் அவரே கூறுகின்ருர், "ஆண்டவர் என் ஆண்டவரிடம் நாம் உம் பகைவரை, உமக்கு கால்மனை ஆக்கும் வரை நீர் எம் வலப்பக்கத்தில் அமரும்" என்ருர்.

எனவே நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த யேசுவையே கடவுள் ஆண்டவரும் மெசியாவுமாக ஆக்கினுர் என்பதை இஸ்ராயேல் குலத்தவரெல்லாம் உறுதியாக அறிந்து கொள்வார்களாக.''

(அப்.பணி. 2/22 – 24, 32 – 36)

ஆகவே புனித இராயப்பரும் மற்றும் அப்போஸ்தலர்கள் அனைவரும் கிறிஸ்து அவர்களிடம் அளித்த பணியை மக்களுக்கு அறிவித்தனர்.

அவர்களுடைய போதனையின் மையக்கருத்து என்னவெனில் கிறிஸ்துவே யேசு, இறைவன், இரட்சகர் என்பதை எடுத்துக்காட்டுவதாகும். ஆகவே அவர்கள் சரித்திரக்கதைகள், சம்பவங்கள் முதலியவற்றை அவர்கள் போதனையில் சேர்த்துக்கொண்டார்கள்.

ஆதித்திருச்சபையில் வாய்மொழி மூலம் நற்செய்தியைப் போதிக்கும் போது பிழையானவற்றை போதியாமல் இருக்க கிறிஸ்தவர்கள் கவனித்துக்கொண்டார்கள்.

இவற்றைத் தடுத்து அதன் உண்மைச் சத்தியங்களைக் காப்பாற்றும் நோக்குடன் அவர்கள் இதை எழுத்து வடிவில் எழுத முற்பட்டார்கள்.

**எழுத்தில் உள்ள நற்செய்தி**

நற்செய்தி 4 நற்செய்தி ஆசிரியர்களால் எழுதப்பட்டது. இதில் இருவர் யேசுவின் அப்போஸ்தலர், மற்றைய இருவரும் அவர்களுடன் வாழ்ந்து வந்தவர்களாவர். இந் நற்செய்திகள் எழுதியவர்களின் பெயர்களைக் கொண்டு வெளிவந்தது. புனித மத்தேயுவும் புனித அருளப்பரும் யேசுவின் அப்போஸ்தலர்கள் ஆவார்கள். அவர்கள் தாங்கள் பார்த்தவற்றையும், கேட்டவற்றையும் அவர்கள் ஞாபகத்தில் உள்ளவற்றையும் எழுத்து வடிவத்தில் எழுதினர்கள். புனித மாற்கு நற்செய்தி புனித இராயப்பரின் போதனையைத் தழுவி எழுதியுள்ளது. புனித லூக்காசின் நற்செய்தி புனித சின்னப்பரின் படிப்பினையைத் தழுவி எழுதப்பட்டுள்ளது. ஏனெனில் புனித லூக்காஸ் புனித சின்னப்பரின் சீடராவர். புனித லூக்காஸ் நற்செய்தியில், புனித மத்தேயு, மாற்கு நற்செய்திகளில் இருக்கும் சம்பவங்கள் பல சேர்க்கப்பட்டுள்ளன.

இந் நற் செய்திகள் நற்செய்தி ஆசிரியர்களின் பண்பு, கலாச்சாரம் இவைகளைத் தழுவி எழுதப்பட்டுள்ளன. இவர்கள் பல்வேறு கலாச்சாரம், பண்பாடு இவைகளை தழுவி எழுதியிருந்தாலும் கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றிலும், அதன் உண்மைச் சம்பவங்களிலும் ஒரு வித மாற்றமும் இன்றி அமைந்திருக்கின்றது.

இந்த 4 ஆசிரியர்களதும் நற் செய்தியில் சித்திரங்கள், நிகழ்ச்சிகள், வாய் மொழிச் சொற்கள் ஆகியன ஒன்றுபட்டதாக அமைகின்றன. அத்தோடு நற் செய்தி ஆசிரியர்கள் சுதந்திரத்துடன், யேசுவின் வாழ்வின் சம்பவத்தில் இருந்து தாங்கள் மக்களுக்கு அளிக்க விரும்பிய செய்திக் கேற்ப அவற்றை எழுதியிருந்தார்கள்.

ஒவ்வொரு நற்செய்தி ஆசிரியர்களும் தங்கள் நற்செய்தியை ஒரு விசேட நோக்கத்துடன் எழுதினமையால் அதற்கு ஏற்ற விதமான விடயங்களை சேர்த்துள்ளனர். ஆகவே நற்செய்தி ஆசிரியரின் நோக்கத்தோடு அதன் அடிப்படைப் பொருளை வைத்து எழுதியுள்ளார்கள் அவர் விசேட விதமாய்ப் பரிசுத்த ஆவியினல், அவரின் உதவியுடன் எழுதியவையே ஆகும்.

இப்போது நாம் ஒவ்வொரு நற்செய்தியாக ஆராய்ந்து பார்ப்போம்.

**புனித மத்தேயு நற்செய்தி**

புனித மத்தேயு நற்செய்தியின் ஆசிரியர் லேவி என்ற வரி வசூலிப்பவர் ஆவார். புனித மத்தேயு அவருடைய நற்செய்தியை அரமிக் மொழியில் எழுதினர். கிறிஸ்தவத்தைத் தழுவிய யூதர்களுக்கு அவர்களின் தாய்மொழி

யில் இது எழுதப்பட்டது இது கி. பி 70 ஆம் ஆண்டிலே எழுதப்பட்டதாகும். இவ் ஆசிரியரின் நோக்கமாவது யேசுக்கிறிஸ்துவே யூத மக்கள் பல்லாயிரம் ஆண்டு களாக எதிர் பார்த்திருந்த மெசியா என்பதை அத்தாட் சிப்படுத்துவதே ஆகும். எமது முன்னோடன் இறைவன் செய்து கொண்ட உடன்படிக்கை நிறைவேறியது என் பதை எடுத்துக் காட்டுவதே ஆகும்.

நற்செய்தி ஆசிரியர் யேசுவின் பரம்பரையை அதாவது இஸ்ரயேலில் இருந்து ஆபிரகாம்வரை எடுத்துக் கூறி யிருக்கின்றார். மத்தேயு யேசுவை, யூதமக்களின் எண் ணங்களையும், நம்பிக்கையயும் பூர்த்தி செய்தவராக எழு தியுள்ளார். ஆகவே இவருடைய நற்செய்தி யூதர்களுக் காக எழுதப்பட்டு இறைவாக்குரைக்கும் நற்செய்தியாக அமைகின்றது. யேசுவின் அப்போஸ்தலர்கள் அநேக மானோர் மீனவர்கள். அவர்கள் எழுத்தாளர்கள் அல் லர். ஆனால் புனித மத்தேயு வரி வசூலிப்பவர். இவரிடம் எழுத்துத்திறன் இருந்தது. யேசு இவரை தன்னைப் பின் செல்ல அழைத்தபோது அவர் எல்லாவற்றையும் விட்டு விட்டு யேசுவின் பின் சென்றார். பின் இவர் தன் திறமை யைக் கொண்டு யேசுவின் வாழ்க்கையையும் போதனை யையும் எழுத்து வடிவத்தில் தொகுத்தார்.



இவர் தனது நற்செய்தியில் யேசுவின் வாழ்க்கைச் சம்ப வங்களையும், உவமைகளையும் படிப்பித்தலுக்கு உகந்த முறையில் எழுதியுள்ளார். அத்துடன் இவரின் நற்செய்தி கற்பித்தலின் நற்செய்தியாக விளங்குகின்றது. நான்கு படைப்புகள் இந்த நான்கு நற்செய்தி ஆசிரியர்களின தும் அடையாளமாக விளங்குகின்றன. புனித மத்தேயு வின் சின்னம் மனிதனாகும். யேசுவின் மனிதத் தன் மையை இவர் ஓர் நல்ல முறையில் தனது நற்செய்தி யில் உள்ளடக்கியிருக்கின்றார்.

ஆகவே அவர் தன் நற்செய்தியை மனிதனுக்கு ஏற்ற முறையில் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கின்றார்.

### புனித மாற்கு நற்செய்தி

புதிய ஏற்பாட்டில் புனித மாற்குவின் பெயரைப் பல தடவைகளில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இவருடைய தாய் ஜெருசலேமில் வாழ்ந்த ஒரு நல்ல பெண் ஆவாள். அப்போஸ்தலர் பணிக்கிணங்க (12 | 12) அப்போஸ்தலர்கள் தங்கள் கூட்டங்களைப் பல தட வைகளில் இவளின் வீட்டிலே தான் நடத்தியிருக்கிறார் கள். இவர் அப்போஸ்தலர் பணியில் குறிப்பிட்டிருக் கும் பரணபாசின் மைத்துனி ஆவாள் புனித மாற்கு இராயப்பரின் மிக நெருங்கிய சீடராவர். இதை நாம் இராயப்பர் 5/13 என்னும் வாக்கியத்தில் காணக்கூடிய தாக இருக்கின்றது. ''என் மகன் மாற்கு'' ஜெருசலேம் கி. பி. 70ஆம் ஆண்டில் அழிக்கப்பட்டது. இதற்கு முன் மாற்கு இராயப்பரிடம் இருந்து பெற்றுக் கொண்ட செய்திகள் யாவற்றையும் எழுதி வைத்திருந்



தார். மாற்கு கிறிஸ்துவின் இயற்கைத் தனத்தை நிரூபிக்கக் கூடிய சம்பவங்களையும், அவருடைய தெய்வீக தன்மை பற்றியும் கூறுகின்றார். அவர் தனது நற்செய்தியை எழுதத் தொடங்கு முன் ''கடவுளின் மகனாகிய யேசுக்கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியின் தொடக்கம்'' என ஆரம்பித்துள்ளார்.

இவருடைய நோக்கமாவது உரோமையில் உள்ள புறவினத்தாருக்கு, யேசுக்கிறிஸ்துவே உலக மாந்தரின் இரட்சகர் என்பதை எடுத்துக் காட்டுவதே ஆகும். உரோமர் அவர்களுடைய ஆளுநரை வணங்கி வந்தனர். ஆகவே புனிதமாற்கு நற்செய்தியில் கிறிஸ்துவே எங்கள் உண்மையானஆளுநர். அவரே மனிதகுலத்தை விடுவிக்க வந்த இரட்சகர் என்பதை எடுத்துக் காட்டுகின்றார். ஆகவே அவர் கிறிஸ்துவின் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களைக் கிறிஸ்துவின் வாழ்க்கையில் இருந்து எடுத்துக் காட்டுகின்றார்.

எனவே இந்நற்செய்தி புதுமைகளின் நற்செய்தி என அழைக்கப்படுகின்றது. இதுவே முதன் முதல் எழுதிய நற்செய்தியாக அறியப்படுகின்றது. இது மிகச் சிறிய நூலாகும்.

## புனித லூக்காஸ் நற்செய்தி



இவர் சீரியா நாட்டைச் சேர்ந்த அந்தியோக்கு என்னும் இடத்தைச் சேர்ந்த ஒரு வைத்தியர் ஆவார். புனித சின்னப்பர் கொலோசேயருக்கு எழுதிய திருமுகத்தில் 4/14 "அன்புமிக்க மருத்துவர் லூக்காவுக்கு'' இதிலிருந்து நாம் அறியக் கூடியதாக இருப்பது என்னவென்றால் புனித சின்னப்பரின் போதனையே லூக்காஸ் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுவதற்குக் காரணமாக இருந்தது. புனித லூக்காஸ் தனது நற்செய்தியில் யேசுவின் வாழ்க்கை வரலாறு, அதில் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் அறிந்து பின் அதை எழுதியிருக்கின்றார்.

இவர் தனது நற்செய்தியில் யேசுக் கிறிஸ்துவே யூதர்களினதும், உலக மாந்தர் அனைவரினதும் இரட்சகர் என்பதை எடுத்துக் கூறியிருக்கின்றார். இவர் தனது நற்செய்தியில் உள்ள அம்சங்களைத் தனக்கு முந்தியுள்ள நற்செய்திகளில் இருந்தும் புனித சின்னப்பரின் படிப்பினையிலிருந்தும் எழுதியிருக்கின்றார்.

இவர் தனது நற்செய்தியை கி. பி. 70 - 80 ஆண்டுகளுக்குகிடையில் எழுதியிருக்கிறார். அவருடைய நற்செய்தியில் அவர், கிறிஸ்துவே இறை மகன், அவர் மனித உருவெடுத்து இவ்வுலகில் வந்து பிறந்தவர் இவரே யூதர்களினதும் யூதர் அல்லாதவர்களினதும் இரட்சகர் என எடுத்துக் கூறியிருக்கின்றார். கிறிஸ்துவின் அன்பையும், நன்மைத் தனத்தையும் இவர் மிக அழகாக வருணித்துக் கூறியிருக்கின்றார்.

இதன் காரணத்தினுலேதான் இவரின் நற்செய்தி புற வினத்தாரின் நற் செய்தியாகக் கருதப்படுகின்றது. இவர் யேசுவின் பாலப் பருவத்தையும்,பற்றிக்கூறியிருப் பதுடன் பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்திருப் பதையும் நாம் காணக் கூடியதாக இருக்கின்றது.

## புனித அருளப்பர் நற்செய்தி




புனித அருளப்பர் யேசுவின் அன்பிற்குரிய சீடனுவார். இவர் வயதில் இளையவராக இருந்தார். இவர் பெத் சாயிடா என்னும் இடத்தில் உள்ள ஒரு சாதாரண நடு வகுப்பைச் சேர்ந்தவர். இவரின் தந்தையின் பெயர் செபதேயு. இவரின் தாயின் பெயர் சலோமி. இவரு டைய சகோதரர் யாகப்பர். இவரும் யேசுவின் ஓர் சீடனுவார். இவர்கள் ''இடியின் மக்கள்'' என் அழைக் கப்பட்டார்கள். இவர்கள் கடும் கோபம் கொள்ளச் கூடியவர்களாதலால் இவர்களை இப்படி அழைத்தார் கள், அவர்களின் கோபத்தனத்தின் காரணத்தை எடுத்துக் காட்டும் ஒரு நிகழ்ச்சியாவது, சமாரியாவைச் சேர்ந்த மக்கள் வேற்றுமை காட்டிய போது இவர்கள் யேசுவிடம் அப்பட்டணத்தை நெருப்பு மழையால் அழிக்கச் சொல்லிக் கேட்டார்கள்.

ஆனுல் புனித அருளப்பர் தனது வயது முதிர்ந்த காலத்தில் அவரின் நற்செய்தியை எழுதும் போது அவர் ஒரு மெய்நூல் அறிஞராக விளங்கினுர். இவருடைய நற் செய்தியின் முக்கிய நோக்கம் கிறிஸ்துவின் தெய் வீகத்தில் அவநம்பிக்கை ஏற்படாது நம்பிக்கை ஊட்டு வதே ஆகும். ஆகவே அவர் கிறிஸ்துவே இறை மகன் அவரே எமது வாழ்வும், வழியும் ஒளியுமாக இருக் கின்றுர் என எடுத்துக் காட்டியிருக்கின்றுர்.

*(அரு. 20/31)* யேசு கடவுளின் மகனுகிய மெசியா என்று நீங்கள் விசுவாசிக்கும் படியும், விசுவாசித்து அவர் பெயரால் வாழ்வு பெறும்படியும் இந்நூலிலுள் ளவை எழுதப் பெற்றுள்ளன.

தயவு செய்து பின்வரும் பகுதிகளை வாசித்திடுக.

''ஆதியிலே வார்த்தை இருந்தது,
அவ்வார்த்தை கடவுளோடு இருந்தது,
அவ்வார்த்தையே கடவுளாயும் இருந்தது.

*(அரு. 1/1)*

''வார்த்தை மனுவானுர், நம்மிடையே குடிகொண்டார்,
அவரது மாட்சிமையை நாங்கள் கண்டோம்,
தந்தையிடம் இருந்து அவர் பெற்ற மாட்சிமை
ஒரே பேருன
அவருக்கு ஏற்ற மாட்சிமையே. ஆகவே அவர் அருளும்,
உண்மையும் நிறைந்து விளங்கினுர்.

*(அரு. 1/14)*

''நானே உயிர் தரும் உணவு என்னிடம் வருகின்ற வனுக்கு பசியே இராது. என்னில் விசுவாசம் கொள் பவனுக்கு என்றுமே தாகம் இராது.''

(அரு. 16/35)

''நானே உலகின் ஒளி, என்னைப் பின் செல்பவன் இருளில் நடவான். உயிரின் ஒளியைக் கொண்டிருப் பான்.''

(அரு. 8/12)

புனித அருளப்பர் தன் நற்செய்தியில் சம்பவங்கள், கதைகள் அல்லது மற்றைய மூன்று நற்செய்தி ஆசிரியர்கள் கூறியிருப்பதைப் பற்றிக் கூறவில்லை. அவர் யேசுவின் சொல்லிலும், செயலிலும் காணப்படும் ஆன்மீக வார்த்தைகளை, ஞானத்தை அவரது நற்செய்தியில் எடுத்துக் கூறுகின்ருர். இது யேசுவின் ஆன்மீக வாழ்க்கையின் படிப்பினையாக விளங்குகின்றது. அவர் 70 ஆண்டுகளாக யேசுவைப் பற்றி மக்களுக்குப் போதித்தார். அவருக்கு யேசுவோடு இருந்த நீண்ட கால அனுபவத்தின் மூலமாக அவர் யேசுவின் படிப்பினையின் ஆழத்தை அறிந்திருந்தார்.

''நான் உங்களுக்குச் சொல்லவேண்டியவை இன்னும் பல உண்டு. ஆனல் அவற்றை இப்போது உங்களால் தாங்கமுடியாது. உண்மையில் ஆவியானவர் வந்த பின் நிறை உண்மையை நோக்கி உங்களை வழி நடத்துவர்''.

(அரு. 16/12, 13)

புனித அருளப்பர் கிறிஸ்துவைப் பற்றி எடுத்துக் கூறும் உண்மையில் அவரின் நற்செய்தியில் பரிசுத்த ஆவியின் செயலையும், வல்லமையையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

## ஒற்றுமை நற்செய்தி

நற்செய்தி ஆசிரியர்களாகிய மத்தேயு, மாற்கு, லூக்காஸ் இவர்களுடைய நற்செய்தியில் ஒருவகை ஒருமைப்பாடிருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த மூன்று நற்செய்திகளும் ஒன்றை ஒன்று ஒத்திருப்பதால் அவற்றை ஒரே கண்ணேட்டம் கொண்டு பார்க்கலாம். இதன் காரணத்திளுலேதான் இது ''ஒற்றுமை நற்செய்தி'' என அழைக்கப்படுகின்றது. இதிலே கலிலேயாவிலும் யூதேயாவிலும் அவரது பகிரங்க வாழ்க்கையைப் பற்றியும், அவர் தனது எதிரிகளினுல் துன்பப்பட்டு மரித்ததைப் பற்றியும், அவர் உத்தானம், விண்ணேற்பு ஆகியவற்றைப் பற்றியும் கூறியிருக்கிருர்கள். சில சமயங்களில் இவர்கள் மூவரும் ஒரே புதுமைகளையும், ஒரே போதனையையும் பற்றிக் கூறியிருக்கின்ருர். இவைகள் மனிதனை மையமாகக் கொண்டு எழுதப்பட்டன. இவர்கள் மூலம் அவர்களின் நற்செய்திக்குத் தேவையானவற்றை ஒருவர் ஒருவரிடம் இருந்து பெற்றுக் கொண்டார்கள்.

ஆனல் புனித அருளப்பர் தனது நற்செய்தியைக் கடவுளை மையமாகக் கொண்டு எழுதியுள்ளார். ஆதியிலே வார்த்தை இருந்து அவ் வார்த்தை கடவுளோடு இருந்து. அவ்வார்த்தை கடவுளாயும் இருந்தது. (அரு. 1/1) இவர் தனது நற்செய்தியில் கிறிஸ்துவே இரட்சகர் எனவும் அவரே இறைமகன் எனவும் எடுத்துக் கூறியிருக்கின்ருர். இவர் தனது போதனைகளில் ''அடையாளங்கள்''' மூலமாக எடுத்து யேசு இறைமகன் எனவும் அவரே வாழ்வு எனவும் எடுத்துக் கூறியிருக்கின்ருர். ஆனல் இவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் போதனைப் பணிபற்றி எடுத்துக் கூறியிருக்கிருர்கள்.

இப்போது நீங்கள் இந்த நற்செய்தியில் உள்ள ஒற்றுமை, வேற்றுமை பற்றி விளங்கியிருப்பீர்கள் என நினைக்கிறேம்.

நீர் இப்பாடத்தில் உமக்கிருக்கும் அனுபவத்தைக் கொண்டு இப் பயிற்சிகளைச் செய்க.

**செவ்வை பார்த்தல் 1**

மிகவும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. அப்போஸ்தலர்களால் நற்செய்தி உலகம் முழுவதற்கும் அறிவிக்கப்பட்டது.

   i பரிசுத்த ஆவியின் வருகைக்குப் பின்
   ii யேசுவின் உயிர்த்தெழுதலின் பின்
   iii அவர் பரலோகத்திற்குச் சென்ற பின்
   iv புனித சின்னப்பரின் மனந்திரும்பலின் பின்

2. நற்செய்தி என்பதின் அர்த்தம்.

   i தேவதாய்க்கு கபிரியேல் சம்மனசு கூறிய வார்த்தைகள்
   ii அப்போஸ்தலர்கள் எழுதிய கடிதங்கள்
   iii கிறிஸ்துவையும், அவருடைய போதனையையும் பற்றிய செய்தி
   iv திருமுழுக்கு அருளப்பரினல் மக்களுக்கு அளிக்கப்பட்ட செய்தி

3. நற்செய்தி எழுத்தாளர்களில் யேசுவின் அப்போஸ்தலர்களாக இருந்தவர்கள்

   i மத்தேயு, மாற்கு
   ii மத்தேயு, அருளப்பர்
   iii லூக்காஸ், அருளப்பர்
   iv மாற்கு, லூக்காஸ்

4. மத்தேயு தனது நற்செய்தியை எழுதக் காரணம்

   i உரோமர்களுக்கு கிறிஸ்துவே மெசியா என்பதை நிருபிக்க.

ii கிறிஸ்து புறவினத்தாரின் மெசியா என்பதை நிரூபிக்க.

iii யூதேயா நாட்டு மக்கள் எதிர்பார்த்த மெசியா கிறிஸ்துவே என்பதை நிரூபிக்க.

iv கிறிஸ்து இறைமகன் என்பதை நிரூபிக்க.

5 புனித லூக்காஸ்,

i அறிவுரையாளர்
ii சட்டங்களை அமைப்பவர்
iii சட்டவல்லுனர்
iv வைத்தியர்

6 புனித மத்தேயுவின் அடையாளம்

i எருமை
ii சிங்கம்
iii மனிதன்
iv கழுகு

7 கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை அழகுற ஒழுங்காக எடுத்துக் கூறியிருப்பவர்.

i புனித லூக்காஸ்
ii புனித மாற்கு
iii புனித மத்தேயு
iv புனித அருளப்பர்

8 புனித அருளப்பர் தனது நற்செய்தியை எழுதியது

i மனிதனை மையமாகக் கொண்டு
ii இறைவனை மையமாகக் கொண்டு
iii கிறிஸ்துவை மையமாகக் கொண்டு
iv உலகத்தை மையமாகக் கொண்டு

9 புனித மாற்கு தனது நற்செய்தியில் சில புதுமைகளை உள்ளடக்கியிருப்பதற்குக் காரணம்

i இப் புதுமைகளைக் கண்டு மனிதன் வியப்படைதற்கு
ii தனது போதனையில் வெற்றி காண்பதற்கு
iii கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மைக்கு சாட்சி பகர்வதற்கு
iv அவரும் அப்படியான வீரச்செயல்களைச் செய்ய முயல்வதற்கு

10 புனித அருளப்பர் தனது நற்செய்தியை எழுதிய தன் காரணம்,

i கிறிஸ்து இறை மகன் என்றும், அவரே இவ் வுலகின் ஒளி என்றும் நிரூபிக்க.
ii கிறிஸ்துமேல் அவருக்கு இருந்த தனிப்பட்ட அனுபவங்களைப் பற்றி எழுதுவதற்கு
iii மற்ற மூன்று நற்செய்திகளிலும் இல்லாத அம் சங்களை எழுதுவதற்கு
iv நற்செய்தியைப் பற்றிய ஆழமான ஓர் அறிவை எடுத்துக் காட்டுவதற்கு

11 ஒற்றுமை நற்செய்தியின் ஆசிரியர்கள்

i மத்தேயு, மாற்கு, அருளப்பர்
ii மாற்கு, லூக்காஸ், அருளப்பர்
iii அருளப்பர், மத்தேயு, லூக்காஸ்
iv மத்தேயு, மாற்கு, லூக்கால்

12 புனித லூக்காஸ் நற்செய்தியின் அடையாளம் எருமை அது எடுத்துக் காட்டுவது

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

i பாடுகளை, மரணத்தை
ii உண்மைத்தனம், நட்பு
iii உண்மைத்தனம், பரித்தியாகம்,
iv பரித்தயாகம், நட்பு

இப்போது நீங்கள் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் நற்செய்தியைப் போதித்த விதம் பற்றிப் படிக்க இருக்கிறீர்கள். இதைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்வதற்காக நாம் இப்போது ''அப்போஸ்தலர் பணி'' என்ற நூல் பற்றிப் பார்ப்போம்.

பகுதி II

## 4.0 அப்போஸ்தலர்கள் பணி

கிறிஸ்துவால் இறை இராச்சியத்தைப் பற்றி போதிக்கப்பட்ட நற்செய்தியை பெந்தக்கோஸ் திருநாளைக்குப் பின் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு போதிக்கத் தொடங்கினர்கள். இந்நூல் அவர்கள் 30 ஆண்டுகளாக ஆற்றிய போதனைப் பணிகளை களையும், அதன் பலா பலன்களையும் பற்றி எடுத்துக் கூறுகின்றது. இந்நூல் கி.பி 80ஆம் ஆண்டில் எழுதப் பட்டது.

இந்நூலின் ஆசிரியரும் புனித லூக்காசே ஆவர். இதை லூக்காஸ் நற்செய்தியின் 2ஆம் பகுதி எனவும் கூறுவர், சிலர் இதைத் தூய ஆவியின் நற்செய்தி எனவும் அழைப்பர்.

புனித லூக்காஸ் தனது நற்செய்தியை தியேபிளஸ் என்பவரைக் குறித்து ஆரம்பித்துள்ளார். ஆனல் இவர் யார் என்று ஒருவருக்கும் தெரியாது. இதன் அர்த்தம் ''கடவுளை அன்பு செய்யும் ஒருவர்'' திருச்சபை கஷ்டங்கள், துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்ட காலத் திலேயே தான் இந்நூல் எழுதப்பட்டது. ஆகவே தான் இதன் ஆசிரியர் இதனைக் கிறிஸ்தவர்களுக்கு என்று எழுத முடியாதிருந்தது.

சிலர் தியேபிளஸ் என்பது அரசாங்கத்துடன் தொடர் புடையது எனவும் ஆகவே இந் நூல் இப் பெயருடன் ஆரம்பிப்பதினல் திருச்சபையில் கிறிஸ்தவர்களின் துன்புறுத்தல் குறைக்கப்படும் எனவும் நினைக்கிருர்கள்.

அக்காலத்தில் மருத்துவர்கள் ஊழியம் புரிபவர்களா கக் கருதப்பட்டார்கள். புனித லூக்காஸ் தியோபிள சுக்கு ஊழியம் புரிந்தவராக இருக்கக் கூடும்.

இந்நூலின் ஆசிரியரின் நோக்கமாவது, கிறிஸ்துவின் போதனைப்பணி, ஜெருசலேமில் யூத இனத்தவர்களுக் கிடையிலே ஆரம்பிக்கப்பட்டு உலகமெல்லாம் பரவியி ருக்கின்றது என நிரூபித்துக் காட்டுவதாகும். அத்து டன் இது உரோமர் அரசில் இருந்து அல்ல யூத பரம் பரையிலும் கிறிஸ்தவ விசுவாத்திலும் இருந்து ஆரம் பிக்கப்பட்டதொன்ருகும் என எடுத்துக் காட்டுவதா கும்.

இந்நூல் ''அப்போஸ்தலர் பணி'' என அழைக்கப்பட் டாலும் இதில் இராயப்பர், சின்னப்பருடன் மிகச் சிறிய அளவில் இன்னும் மூன்று அப்போஸ்தலர்களின் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன. இதன் ஆசிரியர் இராயப்பரின் ஒழுங்கு முறையையும், யாகப்பர் பற்றி மிகக் குறைவாகவும் புனித அருளப்பரின் பெயரை மூன்று முறையுமே பயன்படுத்தியிருக்கிருர். ஆனல் இது புனித சின்னப்பர் பற்றியே விரிவாக எடுத் துரைக்கின்றது.

இதை ஆறு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1 புனித இராயப்பர் தலைமையில் திருச்சபை ஜெரு சலேமில் பரவுதல்; அவருடைய விசுவாச போத னைப்பணி திருச்சபை பரவுதலுக்குக் காரணமாக இருந்தது. *(1/6 — 7)*

2 பலஸ்தினவில் திருச்சபை பரவுதல். ஏழு உதவி யாட்களைத் தேர்ந்தெடுத்தல். ஒரு உதவியாளரா கிய புனித முடியப்பரின் பரித்தியாக வாழ்க்கை. யூதர்களின் கசப்பான எண்ணம். சவுலின் மன மாற்றம். *(6/8 — 9/31)*

3 திருச்சசை அந்தியோக் வரைபரவுதல். இராயப் பர் மூலம் புறவினத்தாராகிய கொர்னேலியரின் மனமாற்றம். திருச்சபையின் துன்புறுத்தல்.
*(9/32 — 12/2A)*

4 திருச்சபை கல்கத்தாவரை பரவுதல். புனித சின்னப்பரின் 1 வது மறை பரப்புப் பயணம் இதன் விளைவாக உண்டான 1 வது ஜெருசலேம் சங்கம்; அதனுல் ஏற்பட்ட நன்மைகள் (12/25 — 16/15)

5 திருச்சபை ஆசியாவில் இருந்து ஐரோப்பா வரை பரவுதல். புனித சின்னப்பரின் 2வது மறை பரப்புப் பயணம்.

(16/21 – 19/20)

6 புனித சின்னப்பரின் 3வது மறை பரப்புப் பயணம். உரோமாபுரி வரை திருச்சபை பரப்புதல். புனித சின்னப்பர் கைதியாகுதல்.

(19/20 - 28)

புனித லூக்காசுக்கு இந்நூலின் 15வது அதிகாரம் வரை கூறப்பட்டுள்ள விடயங்களில் எதுவிதமான அனுபவமும் இருந்ததாகக் காணக் கூடியதாக இல்லை. அவர் தனக்கு வேண்டியவற்றை அந்தியோக பெரியோர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஆனல் 16ஆம் அதிகாரத்திலிருந்து முடிவுவரை அவர்தனது சொந்த அனுபவத்தின் மூலமாக இந்நூலை எழுதியுள்ளார். அத்துடன் இவர் பொதுவாக ஒன்றைத் தொடங்குமுன் ''நாங்கள்'' எனத் தொடங்கியுள்ளார்.

(உ-ம்) 16/10 — 16, 20/5-6, 21/1-16 27/1-28

இந்நூலின் இறுதி அதிகாரங்களில் சாதாரண ஏழை மக்களின் தலைமையில் பரிசுத்த ஆவியின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட மறை பரப்புப் பணிச் சேவையையும் காணக்கூடியதாக இருக்கின்றது. திருச்சபை உரோம புரியிலும் பரவியது. இதனுல் அவர்கள் பல விதமான கஷ்டங்கள், இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

நீர் அப்போஸ்தலர் பணியை வாசிக்கும் போது ஒரு நல்ல அறிவைப் பெற்றுக் கொள்வீர்.

இப்போது அப்போஸ்தலர் பணி நூல் என்பது என்ன என்று தெரிந்திருப்பீர். உங்களது அந்த அறிவைப் பரீட்சிக்கு முகமாக கீழ் உள்ள செவ்வை பார்த்தலில் ஈடுபடுங்கள்.

**செவ்வைபார்த்தல் 2** மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

1 அப்போஸ்தலர் பணியில் கூறப்பட்டிருப்பது,

i திருவழிபாட்டின் முறை
ii திருச்சபைச் சரித்திரம்
iii மறை ஆசிரியர்
iv ஆன்ம அறிவியல்

2 முதலாவது வேத சாட்சி

i புனித இராயப்பர்,
ii புனித சின்னப்பர்
iii புனித யாகப்பர்
iv புனித முடியப்பர்

3 அப்போஸ்தலர்கள் நற்செய்தியைப் போதிக்கத் தொடங்கியது.

i கிறிஸ்துவின் விண்ணேற்புவிற்குப் பின்
ii உத்தானத்தின் பின்
iii பெந்தக்கோஸ் திருநாளைக்குப் பின்
iv கூடாரத் திருவிழாவிற்குப் பின்

4 கொனேலியஸ்

i புனித இராயப்பரினுல் ஞானஸ்னுனம் கொடுக்கப்பட்ட ஒரு புற இனத்தவர்,
ii பலஸ்திஞவைச் சேர்ந்த ஒரு குரு
iii புனித இராயப்பரினுல் குணமடைந்த முடவன்
iv யூதனுகிய வரி வசூலிப்பவன்.

5 புனித லூக்காஸ் அப்போஸ்தலர் பணியில் கூடிய கவனத்தை செலுத்தியது,

i ஜெருசலேமில் திருச்சபை பலவிதமான கஷ்டங்களை எதிர்நோக்கியிருந்ததால்
ii புனித சின்னப்பரின் மறை பர்ப்புப் பணிச் சேவையில்
iii இராயப்பர், அருளப்பரின் மறைபரப்புப் பணிச் சேவையில்
iv யூத சமயத்திலும், கிறிஸ்தவத்திற்கிடையிலும் உள்ள வேற்றுமையில்

6 அப்போஸ்தலர் பணி எழுதப்பட்டது,

i புனித லூக்காஸ் என்பவரால்
ii ,, இராயப்பரால்
iii ,, தியோப்பிளஸ் என்பவரால்
iv ., சின்னப்பரினுல்

7 தியோப்பிளஸ் என்பதின் அர்த்தம்

i இறைவனைக் காணும் ஒருவர்
ii இறைவனைத் தேடும் ஒருவர்
iii இறைவனை அன்பு செய்யும் ஒருவர்
iv இறைவனின் இரக்கத்தைப் பெறும் ஒருவர்

8 புறவினத்தாருக்கிடையில் நற்செய்தியைப் பரப்பு வதற்கு ஏதுவாக இருந்தது.

i புனித முடியப்பரின் மரணம்
ii சவுலின் மனமாற்றம்,
iii கொனோலியஸ் கிறிஸ்துவத்தைத் தழுவியது
iv தியோப்பிளஸ் ஞானஸ்ஞனம் பெற்றது.

9 ஐரோப்பாவில் கிறிஸ்தவ மதத்தைப் போதித்தவர்

i புனித மத்தேயு
ii புனித யாகப்பர்
iii புனித மாற்கு
iv புனித சின்னப்பர்

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

இப்போது நாங்கள் உங்கள் கவனத்தை திரு முகங்க ளில் செலுத்துவோம்.

## பகுதி III

## 5.0 திரு முகங்கள்

புதிய ஏற்பாட்டில் 4 சுவிசேசங்களைத் தவிர்த்து இன் னும் 23 நிருபங்கள் இருக்கின்றன. இவை காலம் விட்டு காலம் எழுதப்பட்டவைகளாக இருப்பதன் காரணம், அன்று வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு பிரச் சினையின் போது புத்திமதியும், விளக்கமும் கொடுப்ப வையாகவும், கிறிஸ்தவன் போதனைக்கு அவரின் கண் ணோட்டத்தில் விளக்கம் கொடுத்து கிறீஸ்தவர்களுக்கு உதவி செய்பவையாகவும் அமைந்தன. திருக்கூட்டம் இன்று திருப்பலியின் முன் பகுதியில் இந்த நிருபங்க ளில் இருந்து வாசகங்களை எடுத்துள்ளது. இந்த நிரு பங்களில் புனித சின்னப்பரின் கடிதங்கள் 13 அடங்கி யுள்ளன. எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தை விட மற்றைய புனித இராயப்பர், யாகப்பர், அருளப்பர், யூதர் எழுதிய திருமுகங்களும், திருவெளிபாட்டுக் கோவையும் இடம் பெறுகின்றன. பொதுவாகச் சொல்லப்போனால் இதனை 2 பிரிவுகளாகப் பிரிக்க லாம். அவையாவன (i) கிறீஸ்தவ விசுவாசம், (ii) கிறீஸ்தவ வாழ்க்கை அல்லது கிறீஸ்தவ வழி காட்டி. அந்தக் காலத்தில் ஆதிக் கிறீஸ்தவர்களுக்கு இத்திருமுகங்கள் சிறந்த கிறீஸ்தவ வழிகாட்டியாகவும் அவர்கள் வாழ்க்கையில் கிறீஸ்தவர்களாகச் சிந்திக்க வும், செயற்படவும் உதவியாக இருந்தன. தற் போது இவை கிறீஸ்தவ வாழ்வுக்கு சிறந்த வழியாக வும், ஒளியாகவும் அமைகின்றன.

**புனித சின்னப்பருடைய திருமுகங்கள்**

புனித சின்னப்பர் முதலில் ''சவூல்'' என்று அழைக்கப்பட்டவர். இவர் பிறந்த இடம் ''தாசில்'' சிறிய ஆசியாவுக்குரிய இடம். இவர் ஓர் யூதன், மிகவும் பழமை பேணும் பரிசேயன். அவரின் தந்தையார் மிகவும் முன்மாதிரியான சேவை அளித்தமையால் இவருக்கு ரோமன் பிரசா உரிமை கிட்டியது. சவூல் 13 வயதாயிருக்கும் போதே ஜெருசலேமுக்கு அனுப்பப்பட்டு, யூத அரசியல் அழைப்புக்களைப் படிக்கும் வாய்ப்புப் பெற்றூர். இதனை 10 வருடங்களாகப் படித்தார். அவர் தாசிஸ்சுக்கு திரும்பி வந்த போது யேசு தன் இறை அரசின் நற் செய்தியைப் போதிக்கும் பணியைக் கலிலேயாவில் தொடங்கியிருந்தார். யேசு உயர்த்தெழுந்த ஒருசில காலத்தின் பின், ஜெருசலமேமில் நற்செய்தி பரவிக்கொண்டிருக்கும் வேளையில் திரும்பவும் சவூல் அங்கு வந்தார். புதியதொரு சமயம் பரவிக் கொண்டிருப்பதால் ஆத்திரமடைந்த சவூல் அதற்கு எதிராக வேலை செய்ய, யூத ஆலோசகர்களிடம் இருந்து அதிகாரமும் பெற்றூர்.

சவூல் இப்படியே கிறிஸ்தவர்களுக்கு எதிராக வேலை செய்துகொண்டு ஜெருசலேமில் இருந்து டமஸ்கசுக்கு குதிரையில் போகும் பொழுது யேசு மிகவும் அற்புதமான முறையில் அவரை அணுகினூர். இயேசுவை சவூல் அநுபவித்தது மிகவும் அற்புதமாகவும் ஆணித்தரமாகவும் இருந்ததனல், அவரில் ஓர் மனமாற்றம் ஏற்பட்டு இறை யேசுவைத் தன் இறைவனுக ஏற்றுக்கொண்டார். அதன் பலன் அவர் கிறிஸ்தவனுக மாறினூர். பின்னர் சவூல் பாவூல், அதாவது சின்னப்பரானூர். இவர் கிறிஸ்து யேசுவின் நற்செய்தியை யூதர்கள், அவர்களின் தலைவர்கள், இன்னும் புற இனத்தாருக்கும் போதிக்கலானூர். அவரின் நற்செய்தியைப் பரப்பும் பணி மிகவும் ஒளிர்கின்ற விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவர் ஒரு புகழ் சார்ந்த போர் வீரனுகத் திகழ்ந்தார். தேசிய இறை கிறீஸ்தவ சமூகத்தைக் கட்டி எழுப்புவதில் ஓர் சிறந்த தலைவனுக திகழ்ந்தார். கிறிஸ்தவ சுதந்திரத்தைப் பற்றி எழுதிய முதல் ஆசிரியர் இவர் தான்.

புனித சின்னப்பர் தனது முதல் திருமுகத்தை ரோமருக்கு எழுதினூர். தான் ரோம கிறீஸ்தவ சமூகத்தை சந்திக்கச் செல்லக் கருத்தாக இருந்ததால் அதற்கு அவர்களை ஆயத்தம் செய்யும் விதத்தில் இந்த முதல் திருமுகம் எழுதப்பட்டிருந்தது. புனித சின்னப்பர் தனது 3வது திருப்பணிப் பிரயாணத்தைத் தொடங்க ஆயத்தமாகும்போது கி. பி. 55–56 இடையில் இத் திருமுகம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விசுவாசம் என்றுல் என்ன? கிறீஸ்தவ வாழ்வின் நிலைமாற்றத்திற்கு முதல்படி முக்கியமாக இருப்பது விசுவாசம் என்று விளங்கும் வேளையில் பாவத்துக்கு அடிமையாக இருக்கும் மனிதன், கடவுளுடன் உறவை விருத்தி செய்ய வேண்டும் என்றும் அதனுல் அவன் பாவத்தி

விருந்து விடுதலை பெற்றுச் சுதந்திரம் அடைந்து கொள்வான் என்றும் காட்டுகின்றார்.

அவர் கிறீஸ்தவ பொறுப்புக்களையும், கடமைகளையும் விளக்குகின்றார்.

உங்கள் தனிப்பட்ட வாசிப்புக்காக கொடுக்கப்பட்டுள்ளன: (றோமர் 3:10 - 18, 7:15 – 25 5:12, 18, 19, 10:9)

அடுத்து நாம் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டு திருமுகங்களுக்கு வருவோம். கி. பி 53 இல் எபேசியருக்கு அவரின் இறைபணி முடிந்தபின் புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு முதல் திருமுகத்தை எழுதினர். கொரிந்து ஒரு கிரேக்க நகரம். இவர் இங்கு கி. பி. 52இல் வந்து 18 மாதங்கள் சீவித்தார். சில காலத்தின் பின் அந்தியோகில் உள்ளவர்கள் அவரைச் சிறையிலிட்டனர். அவர் சிறையிலிருந்து விடுதலையானதும் அப்பொழுதே அவரின் பணியைத் தொடர்ந்தார்.

கிறீஸ்தவ வாழ்க்கையிலும், விசுவாசத்திலும் உள்ள பிரச்சினைகளுக்கு நடவடிக்கை மேற்கொள்ள 2வது பற்று கொரிந்தியரின் முதல் திருமுகம் எழுதப்பட்டுள்ளது.

புனித சின்னப்பரின் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் கிறீஸ்தவ வாழ்க்கையிலும், விசுவாசத்திலும் உள்ள பிரச்சினைகளுக்கு நடவடிக்கை மேற்கொள்வது பற்றிக் கூறப்பட்டுள்ளது. பரி. ஆவியின் கொடைகள், உயிர்தெழல், திருச்சபையின் ஒழுங்குகள், பால் உறவு, திருமணம் முறைகள் பற்றிய மனச்சாட்சி, திருச்சபையின் ஒழுக்கக்கேடான முறைகள், வேறுபாடுகள் பற்றியும் அவருடைய கரிசனையிருந்தது.

அடுத்து வருவது அவரின் கலாத்தியருக்கு எழுதிய திருமுகம். கலேசியா சிறிய ஆசியாவின் குடியேற்றமாக இருந்தது. றோம சக்கரவர்த்திகளின் கீழ் றோம சாம்ராச்சியம் கலாத்தியாவரை பரவியிருந்தது.

கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தால் தான் எப்படி இறைபணி செய்ய அழைக்கப்பட்டார் என்றும், கலாத்தியர்கள் உண்மைக் கிறீஸ்தவ வாழ்வில் கிறீஸ்துவின் அன்பைத் தங்களின் நோக்காகக் கொண்டு எப்படி வாழ்கின்றார்கள் என்பதையும் பற்றி எழுதியுள்ளார். தப்பான பிரச்சாரங்களையிட்டு விழிப்பாக இருக்கும்படி அவர்களுக்கு அவர் அறிவுரை கூறுகின்றார்.

கிறீஸ்தவத்தின் ஆழமான வெளிப்பாட்டைக் கொடுக்கின்ற எபேசியரின் திருமுகம் அடுத்ததாக அவரின் எழுத்தில் இடம் பெறுகின்றது. கி. மு. ஏறத்தாள 100 இல் எபேசியா கிரேக்க குடியேற்றமாக இருந்தது.

பின்னர் யூதரால் இது வியாபாரக் குடியிருப்பாக்கப் பட்டது. புனித சின்னப்பர் அவரின் 2 ஆவது பயணத் தின் போது இதனைப் பார்க்கச் சென்றார்.

உலக பழமைப்பட்ட அற்புதங்களில் ஒன்று டையா னாவின் சமயக்கோட்பாடு முறை. புனித சின்னப்ப ரின் டையனியருடன் கொண்ட மனத் தாக்கல்களால் அவர்கள் தங்களின் சம்பாத்தியத்தின் வழியாக இருந்த டையனா சமய கோட்பாட்டு முறையை விட் டுச் சென்றார்கள்.

இந்தத் திருமுகம் எபேசியருக்கு 61-63 வருடங்களுக் கிடையில் எழுதப்பட்டதுநற்செய்தி என்னும் வார்த் க்குப் பதிலாக புனித சின்னப்பர் மறைபொருள் என் னும் வார்த்தையை பயன்படுத்துகின்றார். இந்த மட லில் புனித சின்னப்பர் கடவுளின் மக்களை மிக மதிப்பு வாய்ந்த கிறீஸ்துவின் ஒன்றுபட்டு வாழும் வாழ்க் கைக்கு அழைக்கின்றார்.

முழு மனித குலத்தையும் ஒன்றுபடுத்திவாழும் மிக உயர்ந்த வாழ்க்கை முறையின் படி வாழ அவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

மிகவும் எளிய வசன நடையில் தனது கருத்துக்களை வெளிப்படுத்துவதன் மூலம் தான் சொல்லுவதுமனித னின் உள்ளத்தில் தெளிவாக உறைய வேண்டும் என பது அவரின் எண்ணம்,

புனித சின்னப்பர் ரோமன் சாம்ராச்சியத்தின் கீழ் உள்ள மெசடோனியாவில் உள்ள பிலிப்பில் தனதுமுதல் திருச்சபையை நிறுவினார். தனது 2 ஆவது பயணத்தின் போதுபிலிப்பியாவைத் தரிசிக்கச் சென்றார். தான் ரோம சிறையில் கி. பி. 63 ல் இருக்கும்போது பிலிப்பியாவுக்கு இந்தமடலை எழுதினார். அச்சமயம் பிலிப்பியா ஐரோப் பாவுக்குச் சொந்தமாக இருந்தது. இதில் அவர்கள் தங்கள் கஷ்டமான கவலையான வேலைகளிலும் அவர் களுக்கு இருந்த நல்ல மனப்பான்மைக்கும் தயாள குணத்துக்கும் நன்றி கூறிப் பிலிப்பியருக்கு எழுதி யுள்ளார். யூதர்களின் சட்டதிட்டங்களுக்கு அடிமை யாகாமல் இருக்கும்படி அவர்களுக்கு அறிவுரையும், ஆற்றலும் கொடுப்பதற்காக இதனை எழுதினார்.

அடுத்து வருவது புனித சின்னப்பர் தனிப்பட்ட முறை யில் திமோத்தியருக்கு எழுதிய 4 மடல்களும் இன்னும் 2 மடல்களும், இத்திருமுகத்திற்கும் மற்றைய திரு முகங்களுக்கும் இடையிலுள்ள வேறுபாடு என்ன வெனில் மற்றைய திருமுகங்கள் இத்திருச்சபைக்கு எழுதப்பட்டிருக்கும் வேளையில் இதுமட்டும் தனிநபர் களுக்கு எழுதப்பட்டது. அது மட்டுமல்லாமல் இவற் டுல் காணப்படும் ஆணைகளில் பல தனிப்பட்ட நப ருக்கே உரியனவாயுள்ளன.

புனித சின்னப்பர் டர்ப்புக்குச்சென்று பின்னர் லிஸ்ரவுக்குச் சென்ருர். தீமேத்தேயு அங்கு ஓர் அப்போஸ்தலராக இருந்தார். இவரின் தாய் ஒரு யூதராக இருந்து விசுவாசியாக மாறியவர். ஆனல் இவரின் தகப்பனர் ஒரு கிரேக்கன். லிஸ்ராவிலும் எக்கோலிலும் உள்ள சகோதரர்கள் திமோதேயுவைப் பற்றி மிகவும் நன்ருகப் பேசினர்கள்.

( அப் – பணி 16:1-2 ) புனித சின்னப்பர் தனது பிரயாணத்துக்குத் துணையாக அழைத்துச் சென்ற தீமோதேயுவை விருத்த சேசனம் செய்தார். ( 1 தீமோ 4:14, 2 தீமோ 1-6 )

இளைஞர்களின் தலைவராக இருந்த இவர் புனித சின்னப்பருக்கு மிக உறுதுணையாளனுக இருந்தார். திமோதேயுவுக்கு எழுதிய முதல் மடலில் புனித சின்னப்பர் திருச்சபையின் தப்பறையான போதகங்களையும் பற்றி எச்சரிக்கையாக இருக்கும்படியும் திருச்சபையின் தலைவர்கள், உதவியாளர்களின் நடவடிக்கை பற்றிய விளக்கமும் கொடுக்கப்பட்டிருந்தது. அத்தோடு தீமோதேயு ஒரு திருச்சபைத் தலைவர் என்ற மட்டில் அவரின் பொறுப்புக்களைப் பற்றியும் ஞாபகப்படுத்தியுள்ளது.

அவரின் 2வது மடலில் இன்றைய இளைஞர்களுக்குப் பொருந்தக் கூடிய புத்திமதிகளைத் தீமோதேயுக்குக் கொடுத்துள்ளார். புனித சின்னப்பர் தீந்துவுக்கும் புறத்தாருக்கும் எழுதிய திருமுகத்துக்கு வருவோம். அப்பணியில் தீந்துவைப்பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை. ஆனல் புனித சின்னப்பர் சொல்லுகிருர் தான் 14 ஆண்டுகள் கடந்தபின் தீந்துவையும் கூட்டிக் கொண்டு மறுபடியும் பரணபாவுடன் ஜெருசலேமுக்குப் போனேன் (கலாத் 2/1) தீந்து புனித சின்னப்பரால் மனம் திருப்பப்பட்டவர். இந்த மடல் எழுதப்பட்டும் புனித சின்னப்பரின் இறுதிக்கால வாழ்க்கை நெருக்கி இருந்த அமையும் கி. பி. 66 கிரேக்க திருச்சபையைப் பற்றி மிகவும் சாதுரியமாய் இருக்கும் படி தீந்துவுக்குப் புத்திமதி கூறுகிருர்.

பிலமோனுக்கு எழுதியுள்ள மடல் மிகவும் சுருக்கமானது. பிலமோன் நன்கு சான்றுபகரும் கிறிஸ்தவனுக இருந்தார். அவரிடம் ஒனஸ்சிமஸ் என்றும் ஓர் அடிமை இருந்தார். இந்த அடிமை தன் எசமான் பிலமோனிடம் இருந்து தப்பி ஓடிப் புனித சின்னப்பரைச் சந்திக்கின்ருன். எப்படியோ இவன் மனமாற்றம் அடைகிருன். புனித சின்னப்பர் பிலமோனை அவரின் அடிமையை மன்னிக்கும்படி தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிருர். அவனை மன்னிப்பு பெற்ற அடிமையாக அல்லாமல் ஒரு கிறிஸ்தவ சகோதரனுக ஏற்றுக் கொள்ளும்படி கேட்கிருர்.

சில பொதுவான திருமுகங்கள் வாசிக்கும் வாய்ப்பு எமக்குக் கிடைத்துள்ளது. முதலாவதாக எபிரேயருக்கு எழுதிய திருமடலைச் சற்றுப் படித்துப் பார்ப்போம்.

எபிரேயர் என்றும் சொல் திருப்பணிகள் என்றும் இவ்வுலகில் நாடோடிகள் என்றும், அகதிகள் என்றும் பல இடங்களில் குறுகிய பொருளில் பயன்படுத்தப் பெறுகின்றது. எனவே எபிரேயர் என்னும் சொல் எல்லாவித யூதரையும் குறித்து நிற்க வேண்டும் என்றும் தேவையில்லை. ஆகவே இச் சொல்லை மட்டும் வைத்துக்கொண்டு இத் திருமுகம் எல்லாவித யூதருக்கும் எழுதப்பட்டது என்று முடிவு கட்டுவது முறையற்றது. யூபிறரிஸ் ஆற்றுக்கு அப்பால் இவர்கள் முதல் வாழ்ந்தார்கள். பலஸ்தீனுவை கண்டடைந்தது ஏறத்தாழ கி.பி. 2300 ஆண்டில்.

யூதர்களும் எபிரேயர் என அழைக்கப்பட்டார்கள். ஆனுல் புதிய ஏற்பாட்டில் அரமிக் மொழி பேசியவர்கள் எபிரேயர் என அழைக்கப்பட்டார்கள். இத் திருமுகத்தின் எழுத்தாளரைப் பற்றிய ஒரு குழப்பம் இருக்கின்றது. அதாவது சிலர் புனித சின்னப்பர் தான் எழுதியுள்ளார் என்று எண்ணுகிருர்கள் அதேவேளை வேருசிலர் 300 வருடங்களின் பின்னர் புனித ஜெரோம் புனித சின்னப்பர் பெயரைஇதில் சொல்லியிருக்கின்ருர் என்று சொல்லுகிருர்கள்.

ஆசிரியர் யாராக இருந்த போதிலும் பிரதான உண்மைகள் இதில் சொல்லப்பட்டுள்ளன.

1 யேசு கிறிஸ்து தான் நித்தியத்துக்கும் இறைமகன் பாடுகளில் மூலம் தன் பரமபிதாவின் கீழ்படிதலைப் பற்றி படித்திருந்தார். அம் மனசுகளுக்கும், இறைவாக்காளர்களுக்கும், மோசேசுக்கும் மேலானவராகப் பழைய ஏற்பாட்டில் கருதப்பட்டவர்.

2 பழைய ஏற்பாட்டில் குருக்கள் எல்லாரிலும் மேன்மை தாங்கிய பெரிய குரு யேசுக் கிறிஸ்து. அவர் தான் நித்திய குரு.

3 யேசுக் கிறிஸ்துவால் விசுவாசிகள் பாவத்தில் இருந்தும் பயத்தில் இருந்தும், மரணத்திலிருந்தும் விடுபட்டன.

மேலே உள்ள உண்மைகளை எபிரேயரின் திருமுகம் மிக ஆழமாக விஸ்தரிக்கின்றது.

அடுத்ததாக வரும் பொதுவான திருமுகங்களில் ஒன்று புனித யாகப்பருடையது. இவர் யேசுவின் உறவினர்களில் ஒருவர். பிற்காலத்தில் ஜெருசலேமின் ஆயர்களில் ஒருவராக இவர் பணிபுரிந்தார். இவர் தன்னுடைய திருமுகங்களில் தான் கடவுளினதும், யேசுவினதும் பணிவிடைக் காரன் எனத்தன்னை அறிமுகம் செய்கின்ருர். இவர் தனது திருமுகத்தைப் பல இடங்களிலும் பரவியிருந்த 12 கோத்திரங்களுக்கும் எழுதினுர்.

(யாக. 1 : 1) இந்தப் பாடத்தின் மூலம் தன்னுடைய நோக்கத்தை விபரிக்கின்றார். கடிவுளின் மக்கள் அனைவருக்கும் எழுதுகின்றார்.

இவர் தனது திருமுகத்தில் கிறிஸ்தவர்களின் அறிவைப் பற்றியும், கிறிஸ்தவர்களின் மனநிலையைப் பற்றியும் கிறீஸ்தவ வாழ்க்கை முறையைப் பற்றியும் பேசுகின்றார். அத்துடன் செல்வம், ஏழ்மை, பாவ சோதனைகள், நா அடக்கம், செபம், பொறுமை என்பன பற்றிய புத்திமதிகளையும் கொடுக்கின்றார்.

அடுத்து நாம் புனிய இராயப்பரின் இரண்டு திருமுகங்களுக்கும் வருவோம். இவர்தான் யேசுகிறீஸ்துவின் அப்போஸ்தலர்களின் தலைவர் நற்செய்தியில் சைமன், யோனாவின் மகன் எனப் பெயர் பெற்றவர். இவர் பெத்தூயிடா என்னும் இடத்தில் இவரின் மனைவி யோனேடும் சகோதரர் அன்று வோடும் வாழ்ந்தார். இவரின் சகோதரர் அன்றுமூலமாகத்தான் யேசு இவரை அறிந்து கொண்டார். பெத்தான் என்றும் ஊரில் இராயப்பர் யேசுவைச் சந்தித்தார். யேசு இவருக்கு இராய் (பொருள் — கல்) என்று பெயர் இட்டார். யேசு அவரைத் திருச்சபையின் முதல் தலைவராக்கினார்.

இராயப்பரின் முதல் திருமுகம் சிறிய ஆசிய மக்களுக்கு அவர்களின் சோதனைவேளைகளிலும் விசுவாசத்திற்காக துன்பப்படும் போதும் அவர்களைத்தைரியபடுத்தும் முகமாக எழுதப்பட்டது.

புனித இராயப்பரின் 2வது மடல் முதலாவது மடலைவிட மிக விரிவானது. மனித சமூகத்தின் நடவடிக்கை மேற்கொள்வது பற்றியும் பிழையான படிப்பினைகள் அதனால் வரும் தவறான முடிவுகள் என்பன பற்றிய விளக்கம் கொடுக்கப்படுகின்றது. இதனால் புனித இராயப்பர் தமது புத்திமதிகள் மூலம் மேற்கூறியவிதமான படிப்பிணைகளையும், வாழ்க்கை முறைகளையும், தவிர்த்து வாழும்படி கூறுகின்றார். புனித இராயப்பரின் திருமுகத்துக்குப் பின் புனித அருளப்பரின் திருமுகம் வருகிறது. இவரது 3 திருமுகங்கள் உள்ளன. நற்செய்தியின் அறிமுகத்தில் புனித அருளப்பரைப் பற்றிய விளக்கம் கொடுக்கப்பட்டிருப்பதைப் படித்திருக்கிறீர்கள். தப்பறைகளைத் தண்டிக்க அருளப்பரின் திருமுகங்கள் எழுதப்பட்டன.

தப்பறையான கி. பி. 90 ஆண்டில் யேசுவின் இறைத் தன்மையைப் பற்றிய படிப்பினைகளைக் கண்டித்து எழுதினார். பலதடவைகளில் அவரின் எழுத்தில் கண்டிக்கும் நடைதான் அதிகம் காணப்படுகிறது. தன் அனுபவ அதிகாரத்தோடு ஆரம்பிக்கும் ஆசிரியர் பல வேளைகளில் தம் வாசகர்கள் தம்மிடமிருந்து கேட்டறிந்ததை அவர்களுக்கு நினைவூட்டுகின்றார்.

இரண்டு நோக்கங்கள் முதல் திருமுகத்துக்கு உள்ளன.

1 மக்களை இறைமகன் யேசு கிறிஸ்துவோடு ஆழமான உறவு கொண்டு வாழும்படியான ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

2 தப்பறையான படிப்பினைகளையிட்டு விழிப்பாயிருக்கும்படி சொல்வது அவரின் இரண்டாவது நோக்கமாக இருந்தது.

உலகைச் சார்ந்தவர்களின் பழக்கவழக்கங்களில் உள்ள தீங்குகள் இந்தத் தப்பறையான போதனைகளுக்கு அத்திவாரமாக இருந்தன. இறை மகன் யேசுக் கிறீஸ்து மனிதராக இருக்க முடியாது என்பது அவர்களின் விசுவாசமாக இருந்தது.

ஆசிரியர் தப்பறையான போதனைகளைத் தவிர்க்கும் விதத்தில் யேசு உண்மையான மனிதன், அவரில் விசுவாசம் கொள்பவர்கள் கடவுளை அன்பு செய்து மனிதனை அன்பு செய்ய வேண்டும் என்று மிகவும் விரிவான விளக்கம் கொடுக்கின்றார். புனித அருளப்பரின் இரண்டாவது திருமடல், திருச்சபையின் தலைவர்கள் அனுப்பியதுபோல, தேவதாய்க்கும், அவளின் பிள்ளைகளுக்கும் எழுதப்பட்டிருந்தது. புனித அருளப்பர் தான் அந்த காலத்தில் வாழ்ந்த முதிர்ச்சி பெற்ற அப்போஸ்தலர். கீழைத்திருச்சபைக்கும்அதன் அங்கத்தவர்களுக்கும் இந்தத் திருமுகம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

தப்பறையான போதகர்களுக்கும், போதனைகளுக்கும் எதிரான அறிவுறுத்துதல்களும் ஒருவரை ஒருவர் அன்பு செய்ய வேண்டும் என்னும் வேண்டுதலும் தான் அந்தச் செய்தியாக இருந்தது.

புனித அருளப்பரின் 3ஆம் திருமுகம் திருச்சபையின் தலைவன் காயுவுக்கு எழுதப்பட்டது. இந்தப் பெயர் ஒரு பொதுப் பெயராக இருகின்றது. புதிய ஏற்பாட்டில் 4 முறை இது உபயோகப்படுத்தப்பட்டது. ''காயு வாழ்த்தப்படுவாராக.''

- இவர்தான் புனித சின்னப்பரைக் கொரிந்தியில் வரவேற்று விருந்துபசாரம் செய்தவர். ( ரோமன் 19/23, 1 கொரி 1/14 )
- புனித சின்னப்பருக்கு அவரின் மக்கெடானியாவின் பிரயாணத்துக்கு வழிதுணையாக இருந்தவர். ( அப. பணி 20:4 )
- எபேசிய குழப்ப காலத்தில் புனித சின்னப்பரோடு தங்கி இருந்தவர். (அப பணி 19/29)

காயு கிறிஸ்தவர்களுக்கு உதவியாக இருந்தார். அதனால் புனித சின்னப்பர் இவரைப் போற்றுகின்றார்.

அதே நேரம் டேமித்தியர்க்கு எதிராக இருக்கும்படி அறிவுறுத்துகின்ருர். கடைசியான திருமடல் புனித யூதா. இவர் யேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் அல்ல. இவர் யாகப்பரின் சகோதரர் யேசுவின் உறவினர். இந்தத் திருமடல்கள் புனித இராயப்பரின் நடைபாவனைகளை ஒத்திருப்பதைக் காணலாம். தப்பறையான போதனைகளையிட்டு விழிப்பாயிருக்கும் படியும், பிரமாணிக்கமுள்ள பரிசுத்தர்களாக மற்றவர்களின் மத்தியில் வாழ வேண்டும் என்றும் இம்மடலில் படிப்பினை உள்ளது. விசுவாசத்திற்காகப் போர் செய்யும்படி வாசகர்களை ஊக்குவிக்கின்ருர்.

புனித யூதாவின் திருமுகத்துடன் புதிய ஏற்பாட்டுத் திருமுகங்கள் முடிவடைகின்றன.

இதுவரை நீங்கள் கற்ற திருமுகங்கள் பற்றிய பாடத்தைப் பின்வரும் செவ்வைபார்த்தல் மூலம் மீண்டும் நினைவு படுத்திக் கொள்வோம்.

## செவ்வைபார்த்தல் 3

மிகப் பொருத்தமான விடையின்கீழ் கோடிடுக.

*1* புதிய ஏற்பாட்டில் உள்ள திருமுகங்கள் எத்தனை?

i *13*

ii *21*

iii *8*

iv *27*

*2* புனித சின்னப்பர் திருமுகங்கள் எழுதியது.

i வேறுபட்ட சபைகளுக்கும் வேறுபட்ட மக்களுக்கும்

ii ரோமன் அதிகாரிகளுக்கும் அதன் நிர்வாகத்தின் பணிவிடையாளர்களுக்கும்.

iii யூத குருக்களுக்கும் கோயில் பணிவிடையாளர்களுக்கும்.

iv வெவ்வேருன இடங்களில் வாழ்ந்த அப்போஸ்தலர்களுக்கு

*3* புதிய ஏற்பாட்டுத் திருமுகங்களில் பொதுவாக வெளியான செய்தி.

i கிறிஸ்துவின் தெய்வீகத்தையும், மனிதத் தன்மையையும் பற்றிய விளக்கம்.

ii ஆதித் திருச்சபை எப்படி அமைப்புப் பெற்றது என்பது பற்றிய விளக்கம்.

iii கிறிஸ்தவர்களின் விசுவாசத்தையும் வாழ்க்கையையும் பற்றிய விளக்கம்.

iv திருமறையைப்பற்றி எழுந்த வினுக்களுக்குத் தீர்க்கமான விடை

4 புனித சின்னப்பர் பரி. ஆவி பற்றி விரித்துரைப்பது

i எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில்
ii கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில்
iii கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில்
iv பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில்

5 புனித சின்னப்பர் கொலோசியருக்கு எழுதிய திருமுகத்தின் மூலம் கவனத்துக்குக் கொண்டு வருவது.

i நாம் குடும்ப வாழ்க்கையில் அமைதியைக் குலைக்கக் கூடாது.
ii திருச்சபையின் தலைவர்களை மதிக்க வேண்டும்.
iii யூத பண்பாட்டுச் சட்டதிட்டங்களுக்கு அடிமையாகக்கூடாது.
vi தப்பான போதனையாளர்களின் புத்திமதிகளில் விசுவாசம் கொள்ளவேண்டாம்.

6 இளைஞர்களுக்குச் கொடுக்கப்பட்ட புத்திமதிகளைப் பற்றிய அறிவு கிடைக்க நாம் வாசிக்க வேண்டிய திருமுகம்.

i தெசலோனியருக்கு எழுதிய முதல் திருமுகம்.
ii தெசலோனியரின் இரண்டாவது திருமுகம்.
iii திமோதேயு முதலாவது திருமுகம்.
iv திமோதேயு இரண்டாவது திருமுகம்.

7 புதிய ஏற்பாட்டில் எபிரேயரை விளங்கிக் கொண்டது.

i காபானில் இருந்து வந்த மக்கள்.
ii அரமிக் மொழி பேசிய ஏபிரேய மக்கள்.
iii ஏபிரேயர் எனப் பெயர் கொண்ட பிதாபிதாக்களின் குலவழி வந்தவர்கள்.
iv தேவதூதர்களால் இந்தப் பெயர் கொடுக்கப்பட்ட ஒரு குலமக்கள்,

8 கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய தப்பான கருத்துக்களைத் திருத்திக்கொடுக்க எழுதப்பட்ட திருமுகம்.

i எபேசியருக்கு எழுதிய திருமுகம்.
ii கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகம்.
iii தெசலோனியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகம்.
iv பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில்.

9 ஒன்றுக்கொன்று ஒத்ததாக இருக்கின்ற திருமுகங்கள்.

i புனித யாகப்பரின் திருமுகமும் இராயப்பரின் முதலாவது திருமுகமும்.
ii புனித யூதாவின் திருமுகமும் புனித அருளப்பரின் மூன்றும் திருமுகமும்.
iii புனித இராயப்பரின் முதல் திருமுகமும் புனித அருளப்பரின் இரண்டாம் திருமுகமும்.
iv புனித யூதாவின் திருமுகமும் புனித இராயப்பரின் இரண்டாம் திருமுகமும்.

10 அடிமைத்தனத்தில் இருந்து எம்மை அகற்றுவதற்காக அழைக்கும் ஆன்மீக மறுமலர்ச்சி கொண்டதும், எம்மை சமுதாய வெளிப்பாட்டுக்கு இட்டுச் செல்வதுமான திருமுகம்.

i ரோமருக்கு எழுதிய திருமுகம்.
ii பிலோமனுக்கு எழுதிய திருமுகம்.
iii சீந்துவுக்கு எழுதிய திருமுகம்.
iv திமோதேயுவுக்கு எழுதிய திருமுகம்.

11 தன் சக கிறிஸ்தவர்க்கு உதவி செய்தார் என்பதால் காயுவைப் புகழ்ந்தது.

i புனித சின்னப்பர்
ii புனித யாகப்பர்
iii புனித அருளப்பர்
iv புனித யூதா

12 புனித சின்னப்பர் அவரின் திருமுகங்களை எல்லாம் எழுதியது.

i ரோமையில் சிறையில் இருக்கும் வேளை
ii கி. மு. 66 இல்
iii பரி. ஆவியின் திருவிழா மிக அண்மையில் இருக்கும் போது
iv கி. மு. 49 – 57 காலப் பகுதியில்

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

புதிய ஏற்பாட்டின் கடைசிப்பகுதியாகிய இறை வெளிபாட்டு நூல் புனித அருளப்பரால் எழுதப்பட்டதை உங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறோம்.

பகுதி IV

## 6.0 திருவெளிப்பாடு

புனித அருளப்பரைப்பற்றி நற் செய்தியில் உள்ள முன்னுரையில் நீங்கள் படித்திருக்கிறீர்கள். திருவழி

பாடு என்பது வெளிப்படையான காட்சி. கிரேக்க ரோமருடைய வேதகலாபனைக் காலத்தில் புனித அருளப்பர் நற்செய்தியைப் போதித்தும் யேசுவிற்கு சாட்சி பகர்ந்தார்.

அரசாங்க அதிகாரி டேமியன் உத்தரவாதத்திற்கு ஏற்ப புனித சின்னப்பரைக் கொதிக்கும் எண்ணெய்க் கிடாரத்தில் போட்டு கொல்ல முயற்சி செய்து கொண்டிருந்தார். இந்த முயற்சி பலன் அளிக்காததால் பத்மு என்ற தீவுக்கு அனுப்பப்பட்டார்.

(திருவெளி 1./9 – 10)

பத்மு தீவில் இருக்கும் போது காட்சி ஒன்று கண்டார். இதனை அவர் எழுத்து, சிமிர்ன, பெர்கழ, தியத்தைகரா, சர்தை பிலதெல்யா லவோத்திக்கேயா என சபைகளுக்கு எழுதி அனுப்பினர். திருவெளி 1/11)

இந்த நூல் வேத கலாபனை காலத்தில் எழுதப்பட்டது என நீங்கள் அறிவீர்கள்.

இவை எல்லாம் இந்த நூலைப் பற்றிய பல விதமான கருத்துக்கள். ஆனல் உலகில் உள்ள எல்லா தீய சக்திகளும் பசாசின் செயல்களும் இறைமகன் யேசு கிறிஸ்துவால் தோற்கடிக்கப்படும் என்பது தெளிவான பிரதான செய்தி.

ஒரு புதிய வானமும், புதிய பூமியும் இறைவனின் விசுவாசிகளுக்கு அமைத்துக்கொடுக்கப்படும் என்பது ஒரு முடிவான கருத்து.

இறை அரசின் நிறைவையும் தன்மையையும் பற்றி இந்த நூல் பேசுகின்றது. ஆனல் இது ஒரு இறை வாக்காக எழுதப்படவில்லை. புனித அருளப்பரினல் துன்பப்படுகின்ற கிறிஸ்தவர்களுக்கு மக்களுக்குத் துன்பங்களுக்கெல்லாம் முடிவும் பலனும் உண்டு என்று வெளிப்படுத்தி எழுதப்பட்டது. நூலின் முக்கிய செய்தி ஆறுதல் தரும் செய்தியாகும். இறைமக்கள் துன்புறுவது இறைத்திட்டத்தின் ஒரு பகுதி துன்புறுத்துவோர் முடிவுறுவார். இறைவர் வெற்றி பெறுவார். புனித அருளப்பர் புது நம்பிக்கையையும் உற்சாகத்தையும் கொடுக்கும் வேளையில் இறைமக்களின் மீட்பின் நிறைவையும் முன் வைக்கின்ருர்.

மனிதன் படைப்பையும் உலகத்தையும் பற்றி ஓர் அளவு அறியக் கூடியவனக இருக்கின்ருன். ஆனல் இந்த அறிவு ஓர் அளவு உடையது. முழுமையான திருவெளிப்பாடு கிடைப்பது இறைவனின் அருளினல் தான். மனிதனின் புத்திக் கூர்மை வெளிச்சம் பெறுவது இறைவனின் இறையூக்கத்தினல் தான். செபத்தினலும் தியானத்தினலும் தான் மனிதன் இறைவனேடு ஒன்று பட முடியும். அப்போது தான் மனிதனுக்கும் உலகுக்கும் அப்பாற்பட்ட அதிக செய்திகள் வெளிப்படையாகும்.

புனித சின்னப்பர் ரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் முழுமையாக எழுதியுள்ளார் (ரோமை 1/20)

''ஏனெனில் கட்புலனுகாத அவருடைய பண்புகளும் அவருடைய முடிவில்லா வல்லமையும், கடவுள் தன்மையும், உலகமுண்டானது முதல் அவருடைய படைப்புக்களிலேயே அறிவுக்கு புலனுகின்றன.''

யேசுகிறிஸ்துவின் வாழ்க்கையையும், வார்த்தையையும், பரி, ஆவியின் ஞான வெளிச்சத்தால் விளங்கிக் கொண்ட புனித அருளப்பர் இந்த நூலை எழுதினுர். இந்நூலில் அடங்கியுள்ளவற்றைக் கிறீஸ்தவர்கள் இலகுவாக விளங்கிக் கொள்ள கூடிய விதத்தில் திருவெளிப்பாட்டையும் காட்சிகளையும் சின்னங்கள் மூலமாக முன்வைத்திருக்கிறுர்.

இன்று எமக்குத் திருவெளிப்பாட்டையும், காட்சிகளையும் விளங்கிக்கொள்வது கஷ்டமாக இருக்கிறது. திருவெளிப்பாட்டு நூலை விளங்கிக் கொள்வதற்கு பிற்போக்கான மத்திய கிழக்கு நாடுகளின் சமூக கலை, கலாச்சாரப் பின்னணியைப் படித்திருக்க வேண்டும்.

18ஆம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் பாபிலோன் நகரை நோக்குவோம். இது அரசர் கம்ருபியின் கீழ் இருந்த சமாரிய நகரமன்று அக்காலத்தில் இது ரோமரின் கீழ் இருந்தது. திருவெளிப்பாட்டு நூலின் ஆசிரியர் பாபிலோன் நகரம் வீழ்ச்சி அடைந்ததையும், அசுபிசாசுகள் குடி கொளளும் இடமாக மாறியதையும் விளக்குகின்ருர்,

உதாரணத்திற்கு திருவெளி : 21 : 1ஐ வாசித்திடுக.

''பின்பு நான் புதிய வானமும் புதிய வையமும் கண்டேன். முதலிருந்த வானமும் வையமும் மறைந்து போயின. கடலும் இல்லாமல் போயிற்று''

இந்தப்பகுதியின் உள்ள வார்த்தை ''கடல்'' இதைப் பற்றி விளங்கிக் கொள்ள விரும்பினுல் முதலில் அந்தக் காலத்தில் இருந்த மக்கள் கடலைப் பற்றி என்ன கருத்துக்கொண்டிருந்தார்கள் என்று அறிந்திருக்க வேண்டும்.

நைல் ஆற்றில் தண்ணீரின் சப்தத்தை கடல் உள் அமிழ்த்திக் கொள்கிறது.

நைல் ஆற்றில் தண்ணீர் எகிப்தியருக்கு ஒரு ஆசிர்வாதமாக இருந்தது. எகிப்தியரின் உயிராக இருந்தது. எகிப்தியருக்கு நைல் ஆற்று நீரை கடல் உள் அமிழ்த்திக் கொள்வது, நன்மையும் உயிரையும், பாரிய அழிவு உள் அமிழ்த்திக்கொள்வது போல் இருந்தது.

மக்காரதீமை கடலுக்குள் வாழ்வது என்பது கிரேக்கருடைய விசுவாசம் மக்காராய் படத்தை, பசாசின்

படத்துக்காகப் பயன்படுத்தினுர்கள். ஆகவே தான் புனித அருளப்பர் தன் திருவெளிப்பாட்டு நூலில் ''கடலும் இல்லாமல் போயிற்று'' என்று சொல்லும் போது, தீமையின் சக்திகளுக்கும் பசாசின் சக்திகளுக்கும் ஒரு முடிவு உண்டு என்பதைக் குறிக்கின்ருர். புனித அருளப்பர், கிறிஸ்தவர்கள் அனுபவிக்கும் துன்பங்களும் துயரங்களும் நிலையற்றவை என்றும், அவை எல்லாவற்றிற்கும் ஒரு நாள் முடிவு உண்டு என்பதை உலகமும் கடவுளின் திட்டமும் முழுமையை அடையும் என்றும் சிந்தனையின் மூலம் அறிமுகம் செய்கின்ருர். இந்தக் கருத்துக்களை முன் வைப்பதன் மூலம் கிறிஸ்துவின் வருகையின் நம்பிக்கையை அவர் நினைவு படுத்துகின்ருர், இந்த திருவெளிப்பாட்டு உண்மைகளுடன் புதிய ஏற்பாட்டு நூல் முடிவடைகின்றது.

இப்போது நீங்கள் புதிய ஏற்பாட்டில் இறைவெளிப்பாட்டைப் பற்றி அறிந்து கொண்டீர்கள். அது பற்றிய உங்கள் அறிவைச் சோதிக்கு முகமாக, சுயமதிப்பீடாகப் பின்வரும் செவ்வை பார்த்தலில் ஈடுபடுங்கள்

**செவ்வை பார்த்தல் 4**

மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

1 புனித அருளப்பர் திருவெளிப்பாட்டு நூலை எழுதிய போது அவர் இருந்த இடம்.

- i கிறீற்
- ii சைப்பிரஸ்
- iii பத்மு
- iv எபேசி

2 திருவெளிப்பாட்டு நூல் எழுதப்பட்டபோது,

- i கலாபனையில் திருச்சபை அகப்பட்டு இருந்தது.
- ii நற்செய்தியைப் போதித்துக்கொண்டு அமைதியும் சுதந்திரமுமாக மகிழ்ந்திருந்த சூழ்நிலை இருந்தது
- iii ஜெருசலேமின் பொதுச் சங்கம் அண்மித்திருந்தது
- iv திருச்சபையில் பிரிவினைகள் இருந்தன.

3 மீட்புத்திட்டம் நிறை பெறும்போது

- i புதிய வானமும், புதிய பூமியும் இருக்கும்.
- ii எல்லாப் படைப்புக்களும் அகமகிழும்.
- iii யேசுகிறிஸ்து அப்போஸ்தலர்களைத் திரும்பவும் வரவழைப்பர்.
- iv தேவ தூதர்களின் தேவை தேவைப்படமாட்டாது.

4 உலகின் படைப்புக்களைப் பற்றிய உண்மைத் தொடர்புகளை ஆழமாக உணர்ந்து கொள்ள முடிவது.

i விஞ்ஞான ஒழுங்கு முறைகள் மூலம்

ii தொழில் நுட்பத்தின் மூலம் மனிதன் பெற்றுக்கொண்ட அபிவிருத்தியால்

iii விசுவாச வாழ்க்கை மூலம்.

iv செபம், தியானங்கள் மூலம் இறைனுடன் ஒன்றுபடுவதால்.

5 திரு வெளிப்பாட்டு நூலில் இறைவனின் வெளிப்பாடும் காட்சிகளும் முன் வைக்கப்படும் முறை

i உவமைகள், ii சின்னங்கள் iii மெய்மை வாய்ந்த iv பலம் வாய்ந்த முறை

6 திரு வெளிப்பாட்டில் விவரித்த பாபிலோன் இருப்பது

i சமாரியா

ii தெசலோனிக்கா

iii எபேசி

iv ரோமா

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

## 7·0 பொழிப்பு

விவிலியத்தின் 2 ஆம் பகுதி புதிய ஏற்பாடு என அழைக்கப்படுகிறது. யேசு கிறிஸ்துவின் வாழ்க்கையும், வார்த்தைகளும், படிப்பினைகளும் அதில் அடங்கியுள்ளன. இதில் 27 நூல்கள் இருக்கின்றன. அவற்றில் 4 நற்செய்தி நூல்கள் உள்ளன. ஆதியில் நற்செய்திகள் வாய்மூலமாகப் போதிக்கப்பட்டது. ஆயினும் தப்பறையான போதனைகளுக்கு இடம் கொடுக்காமலும், உண்மையைப் பாதுகாக்கு முகமாகவும் இவை எழுத்தில் வடிக்கப்பட்டன. புனிதர்கள், மாற்கு, மத்தேயி லூக்காஸ், அருளப்பர் ஆகியோர் நற்செய்திகளின் எழுத்தாளர்கள். முதல் மூன்று நற்செய்தியிலும் ஒகு விதமான ஒற்றுமை இருக்கின்றது. ஆதலால் இதனை ஒற்றுமை நற்செய்தி என்று அழைப்பர். புனித அருளப்பர் கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை மிகவும் ஆழமாக முன் வைத்துள்ளார்.

பரிசுத்த ஆவியானவரின் வருகையின் பின் திருச்சபை 300 ஆண்டுகால எல்லைக்குள் எவ்விதம் பரவியது என்பதையிட்டுக் குறுகிய வரலாறு ஒன்றை அப்போஸ்தலர் பணி நூல் கொடுக்கின்றது. புனித இராயப்பர் சின்னப்பரின் வேலைகளை இந்நூல் பிரதானமாக விளக்குகின்றது. இதில் 21 திருமுகங்கள் உள்ளன. இது கிறிஸ்தவருடைய விசுவாசத்தையும் ஒழுக்க

நெறியையும் ஆழமாகக் கூறுவதுடன் அவன் சிந்தனைகளையும் தெளிவு செய்கின்றது. கிறிஸ்தவ வாழ்வுக்கு வேண்டிய புத்திமதிகளையும் கொடுக்கின்றது. மீட்பின் திட்டம் சின்னங்கள் வழியாக திரு வெளிப்பாட்டு நூலில் கூறப்படுகின்றது.

இப்போது நீங்கள் புதிய ஏற்பாடு பற்றிய மொடியூலைக் கற்று முடித்துள்ளீர்கள். நீங்கள் விளங்கிக்கொண்டவைகளை மீட்குமுகமாகக் கீழ் உள்ள பிற்சோதனைக்கு விடை அளியுங்கள்.

## 8.0 பிற்சோதனை

சரியான விடையின் கீழ் கீறிடுக.

1 புதிய ஏற்பாட்டின் 27 நூல்களையும் எழுதியது

- i 10 ஆசிரியர்கள்
- ii 12 ஆசிரியர்கள்
- iii 15 ஆசிரியர்கள்
- iv 17 ஆசிரியர்கள்

2 மீட்பர் இவ்வுலகிற்கு இறங்கி வந்தது.

- i மனிதனின் இரக்கமான மன்றுட்டு உச்சநிலை அடைந்ததால்
- ii இறைவாக்கினரை வழி நடத்துவதற்கு
- iii குறிக்கப்பட்ட நேரம் முழுமை பெற்றவுடன்
- iv யூத மக்களை அவர்களின் துயரங்களிலிருந்து விடுவிப்பதற்கு

3 நற்செய்தியில் அதிகமாகப் புதுமைகள் சேர்க்கப்பட்டிருப்பது

- i புனித மத்தேயில்
- ii புனித மாற்குவில்
- iii புனித லூக்காஸில்
- iv புனித அருளப்பரில்

4 கிறிஸ்துவின் நற்பண்பு மேன்மையாகக் கொண்டிருப்பது

- i புனித மத்தேயுவில்
- ii புனித மாற்குவில்
- iii புனித லூக்சாஸில்
- iv புனித அருளப்பரில்

5 புனித அருளப்பர் கிறிஸ்துவின் தெய்வீகத்தை மிகவும் சிறப்பாக முன் கொண்டு வந்தது

- i புறவினத்தார் யேசுகிறிஸ்துவை அறியச் செய்வதற்கு

ii அக்காலத்திலிருந்த தப்பான அபிப்பிராயங் களுக்கு விடை அளிக்கும் முகமாக

iii மற்றைய ஆசிரியர்களைத் தான் முதிர்ச்சி யடைந்தவர் என்று காண்பிப்பதற்காக

iv கிறீஸ்துவின் தெய்வீகத்தை தான் அனுப வித்ததால்

6 யேசுவின் மனிதத்தன்மையில் சந்தேகம் இருக்க வில்லை என்று தொடங்கும் திருமுகம் எழுதியது

i தீந்து ii பிலோன்
iii திமோதி iv பிலிப்பு

7 கிறீஸ்துவின் சிந்தனை அதிக கவனத்துடன் கொண்டு வரப்பட்டிருப்பது

i நற் செய்தியில்
ii அப்போஸ்தலர் பணியில்
iii திருமுகங்களில்
iv சொல்லப்பட்ட எல்லா நூல்களிலும்

8 எங்களுக்கு இருக்கும் நற்செய்திகளின் தொகை

i ஒன்று ii நான்கு
iii பதின்மூன்று iv இருபத்தேழு

9 நற் செய்தியின் ஆசிரியர்கள் தங்களின் நூல்களுக்கு அடிப்படை அம்சமாக எடுத்துக்கொண்டது.

i யூதர்களின் கொள்கைத் திரட்டு
ii சொந்த அனுபவங்கள்
iii வரலாற்று அறிக்கைகள்
iv வாய்மொழிப்பாரம்பரியம்

10 திருவெளிப்பாட்டு நூலை விளங்கிக் கொள்ள

i நவீன விஞ்ஞானத்தை நன்ருகப்படிக்க வேண்டும்.
ii அன்று வாழ்ந்த மக்களுடைய சமூக கலா சார மனேபாவ பின்னணியை அறிந்திருக்க வேண்டும்
iii யேசுவினுடைய நற்செய்தியை வாசிக்க வேண்டும்
iv சின்னங்களையும், அடையாளங்களையும் படித் திருக்க வேண்டும்.

11 முதல் மூன்று நற்செய்திகளும் ஒற்றுமை நற் செய்திகள் என்று வந்த காரணம்

i ஒரே முறையில் எழுதப்பட்டதால்
ii மொழியில் ஓர் ஒற்றுமை இருப்பதால்
iii நோக்கம் ஒத்ததாய் இருப்பதால்

iv  நடைமுறைகளிலும் திட்டத்திலும் ஒரு ஒற்றுமை இருப்பதால்

12  கிறீஸ்துவின் வாழ்க்கைப்பாதையையும், சிந்தனைகளையும் வேறுபட்ட கோணங்களில் முன் கொண்டு வந்தது.

i  புனித லூக்காஸ்
ii  புனித சின்னப்பர்
iii  புனித அருளப்பர்
iv  புனித இராயப்பர்

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

**நீங்கள் இப்போது இம்மொடியூலைக் கற்று முடித்துள்ளீர்கள். நீங்கள் வெற்றிகரமாகக் கற்று முடித்துள்ளீர்களா என்பதனைச் சோதிப்பதற்கு நீங்கள் இது பற்றிச் சமர்ப்பிக்க இருக்கும் ஒப்படை உதவும் பின் வருவது அத்தகைய ஓர் ஒப்படையாகும். அதற்கு விடை எழுதித் தொலைக் கல்வி நிறுவகத்துக்கு அனுப்புக.**

## 9.0 ஒப்படை

பின்வரும் வினுக்கள் மூலம் புதிய ஏற்பாட்டின் உண்மைகளை விளக்குக.

(i) புதிய ஏற்பாடு என்றால் என்ன?
(ii) புதிய ஏற்பாட்டில் உள்ள நூல்கள்.
(iii) செய்தி
(iv) கிறீஸ்தவர்களின் வாழ்க்கை அர்த்தமுள்ளதாவதற்கு எப்படி இந்த செய்தி உதவுகின்றது

செயற்பாடு

1  புதிய ஏற்பாட்டோடு தொடர்பு கொண்ட வெவ்வேறான சின்னங்களை வரைந்து அதனை விளக்குக.

## 10.0 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| முற்சோதனை | (1) ii | (2) ii | (3) ii | (4) iv |
| | (5) i | (6) iii | (7) i | (8) iii |

| | | | | |
|---|---|---|---|---|
| செவ்வைபார்த்தல் 1 | (1) i | (2) iii | (3) ii | (4) i |
| | (5) iv | (6) iii | (7) i | (8) ii |
| | (9) iii | (10) i | (11) iv | (12) iii |

| | | | | |
|---|---|---|---|---|
| **செவ்வைபார்த்தல் 2** | (*1*) ii | (*2*) iv | (*3*) iii | (*4*) i |
| | (*5*) ii | (*6*) i | (*7*) iii | (*8*) ii |
| | (*9*) iv | | | |
| **செவ்வைபார்த்தல் 3** | (*1*) ii | (*2*) i | (*3*) iii | (*4*) iii |
| | (5) iv | (6) iv | (7) ii | (8) iii |
| | (9) iv | (*10*) ii | (*11*) iii | (*12*) ii |
| **செவ்வைபார்த்தல் 4** | (*1*) iii | (2) i | (*3*) i | (*4*) iv |
| | (5) ii | (6) iv | | |
| **பிற்சோதனை** | (*1*) ii | (*2*) iii | (*3*) ii | (*4*) iii |
| | (5) ii | (6) ii | (7) iv | (8) i |
| | (*9*) iv | (*10*) ii | (*11*) | (*12*) |

## 11.0 கலைச் சொற்கள்

**1 பெண்டக்கோஸ் திருநாள்**

அறுவடையின் பொருட்டு உள்ள யூதர்களின் திருவிழா 50 நாட்கள் பெந்தகோஸ்துவின் பின் இந்த விழா எடுக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் பெந்தகோஸ் நாளில் தான் அப்போஸ்தவர் மேல் பரி. ஆவி இறங்கியது.

**2 அப்போஸ்தலர்கள்**

இந்தச் சொல் கிரேக்க சொல், ''அப்போஸ்தொல'' யில் இருந்து எடுக்கப்பட்டது. உத்தியோக பூர்வமாக ''அனுப்பட்ட ஒரு சேவகன்'' என்பது இதன் பொருள் ''பிரதி நிதி'' என்னும் இது பொருள் பெறும் ''அப் போஸ்தல'' என்றும் சொல்லும் பயன்படுத்தப்படுகிறது. புதிய ஏற்பாட்டின் இது 2 அர்த்தம் கொடுக்கின்றது.


1 யேசுகிறீஸ்துவால் தெரிந்தெடுக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட 12 பேருக்கும் வழங்கிய பெயர்

2 புனித சின்னப்பர் போன்றவர்களுக்கு ஆதி திருச்சபையில் இச் சொல் இறைவரின் மேற்குறிப்பிட்டது.

3 யூதா இஸ்ராயேலரின் கோத்திரங்களில் ஒன்று அவர்கள் வாழ்ந்த இடத்துக்கு வழங்கிய பெயர் அரசுகள் வேறுபடுத்தப்பட்ட பொழுது இது தெற்கு அரசானது கி. மு. 586 ல் நடைபெற்ற ''கெப்ற காத்'' வெற்றி கொள்ளும். சின்னபின்னத்தில் இந்த இனம் கிட்டத்தட்ட அழிவுக்குள்ளாக இருந்தது. புதிய ஏற்பாட்டில் இது யூதேயா எனவும் யூதேயா மக்கள் எனவும் பெயர் பெற்றது. ''இஸ்ராயேல்'' எனவும் அறிந்துகொள்ளப்பட்டது.

4 புறஇனத்தார்

யூதர்களுடைய சிந்தனையின் படி தாங்கள் தான் இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரே மக்கள் ஆதலால் அவர்கள் மற்றவர்களை மிகவும் கீழ்தரமான கண்ணோட்டத்தோடு நோக்கினார்கள். அப்படி அவர்கள் நோக்கியவர்கள் தான் புறவினத்தார். இந்த மக்கள் மிகவும் பிற்போக்கானவர்கள் புனித லூக்காஸ் தனது நற்செய்தியில் இறைவன் யூதர்களை மாத்திரமல்ல எல்லா மக்களையும் தனது அரசுக்கு அழைக்கின்றார். என வலியுறுத்திக் கூறுகிறார்.


உரோமை
புத்தேயோலி
ஆதிரியாக் கடல்
தெசலோனிக்கா
பிலிப்பி
நிக்கபொலிஸ்
துரோவா
பெர்கமம்
தியத்தைரா
சர்தை
சிமிர்னா
ஏபேசு
கொரிந்து
ஏதென்ஸ்
மிலேத்து
லவோதியா
அந்தியோக்கியா
இக்கோனியா
லிஸ்திரா
கொலோசு
தர்சு
தெர்பை
பெர்க்கா
எதேசா
அந்தியோக்கியா
சாலமி
பாப்பு
சீதோன்
தீர்
டமாஸ்கு
பெல்லா
செசாரியா
சமாரியா
ஜெருசலேம்
அலெக்சாந்திரியா
சீரேனே
மத்திய தரைக் கடல்
— அ. சின்னப்பரின் முதல் பயணம் (அப்பணி 13-14)
.... ஆ. சின்னப்பரின் இரண்டாம் பயணம் (அப்பணி 15-30 18-22)
x-x-x இ. சின்னப்பரின் மூன்றும் பயணம் (அப்பணி 18:23 21:17)
திருவெளிபாட்டில் உள்ள ஏழு சபைகள்
அப்பணி உள்ள ஆதித் திருச்சபை நிறுவப்பட்ட இடங்கள்.

குறிப்பு

குறிப்பு

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி

OFFSET BY THE PACIFIC PRESS (PVT) LTD.